# மீண்டும் வரும் நாட்கள்

## மு. புஷ்பராஜன்

இலங்கையில் குருநகர் என்னும் யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமமொன்றில் 1947இல் பிறந்தவர். இலங்கைப் போக்குவரத்து சபையில் (Ceylon Transport Board) பேருந்து நடத்துநராகவும் பின்னர் சாலைப் பரிசோதகராகவும் (Depot Inspector) பணிபுரிந்தவர். கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக லண்டனில் வாழ்கிறார்.

கலை, இலக்கியம், திரைப்படம் ஆகிய துறைகளில் ஈடுபாடுடைய புஷ்பராஜன், 1970களில் எழுதத் தொடங்கியவர். இலக்கிய, திரைப்பட விமர்சனக் கட்டுரைகளும் சிறுகதைகளும் கவிதைகளும் எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த தீவிர கலை, இலக்கிய இதழான *அலை*யின் (முதல் 25 இதழ்கள் வரை) ஆசிரியர் குழுவில் ஒருவராக இருந்தவர். விளக்கக் குறிப்புகளுடன்கூடிய, மீனவர் பாடல்களின் தொகுப்பு ஒன்றினை *அம்பா* (அலை வெளியீடு, 1976) என்ற பெயரில் வெளியிட்டுமிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TAMILIYAL

மு. புஷ்பராஜன்

# மீண்டும் வரும் நாட்கள்

காலச்சுவடு
பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை 60 ரூபாய்

**மீண்டும் வரும் நாட்கள்** ◆ கவிதைகள் ◆ ஆசிரியர்: மு. புஷ்பராஜன் ◆ © மு. புஷ்பராஜன் ◆ முதல் பதிப்பு: ஜூலை 2004 ◆ இணைந்து வெளியிடுவோர்: தமிழியல், லண்டன்; காலச்சுவடு பதிப்பகம், 669 கே. பி. சாலை, நாகர்கோவில் 629 001, தொலைபேசி: 91–4652–278525, தொலைநகல்: 91–4652–231160, மின்னஞ்சல்: kalachuvadu@sancharnet.in ◆ அச்சுக் கோப்பு: சுதர்சன் கம்ப்யூட்டர்ஸ் ◆ அட்டை வடிவமைப்பு: சந்தோஷ் ◆ அட்டை அச்சாக்கம்: பிரிண்ட் ஸ்பெஷாலிட்டீஸ், சென்னை 600 014 ◆ அச்சாக்கம்: மணி ஆஃப்செட், சென்னை 600 005

காலச்சுவடு பதிப்பக வெளியீடு : 93

**Meendum Varum Naatkal** ◆ Poems ◆ Author: M. Pushparajan ◆ © M. Pushparajan ◆ Language: Tamil ◆ First Edition: July 2004 ◆ Size: Demy 1 x 8 ◆ Paper: 24 kg maplitho ◆ Pages: 128 ◆ Copies: 1100+100 ◆ Jointly Published by Tamiliyal, 27-B High Street, Plaistow, London E13 0AD, Phone: 020 8472 8323, email: ripiyer@yahoo.com and Kalachuvadu Pathippagam, 669 K.P. Road, Nagercoil 629 001, India. Phone: 91-4652-278525, Fax: 91-4652 - 231160, e-mail: kalachuvadu@sancharnet.in ◆ Typeset : Sudarsan Computers ◆ Cover Design : Santhosh ◆ Wrapper Printed at Print Specialities, Chennai 600 014 ◆ Printed at Mani Offset, Chennai 600 005 ◆ Price Rs. 60

**Selling Rights:** Sudarsan Books, 74 East of Tower, Nagercoil 629 001, Phone: 91- 4652 - 228445, Fax: 91-4652-231160, E-mail: sudarsanbooks@yahoo.com

ISBN 81-87477-80-6

7/2004/S.No.93, kcp 112, 24 (1) 1200

மாமரத்து நிழலின்கீழ்
மருந்துக்கு நிற்கையிலே
அருகில் இருந்த
பொ்ணபேத் என்னும்
என்
சின்னப் பெரியம்மாவுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழியல் – காலச்சுவடு வெளியீடு

**வர்ணங்கள் கரைந்த வெளி (கவிதைகள்)**
**தா. பாலகணேசன்; ரூ. 50**

தேசங்களின் எல்லைகள் தகர்ந்து, விரிந்து அலை மோதிக் கொண்டிருக்கும் ஈழத்து இலக்கியத்தின் நீட்சியை உரைத்துப் பார்ப்பதற்கு தா. பாலகணேசனின் கவிதைகள் உதவும். குறிப்பாக ஈழத்தின் போர்ச் சூழலையும், புலம்பெயர்ந்தோரின் இருப்பையும் இக்கவிதைகள் பாடுபொருளாகக் கொண்டுள்ளன. இவருடைய கவிதைகளின் பின்புலத்தில் புலம் பெயர்ந்தோருக்கும் தாயகத்திற்கும் இடையேயான பரிமாற்றத் துண்டிப்பு அல்லது உறவின் துண்டிப்புத் துயராய் இழையோடுவதை அவதானிக்கலாம்.

# பொருளடக்கம்

| | |
|---|---|
| ஒரு காலை | 35 |
| யௌவனம் | 37 |
| நீதியும் சமாதானமும் | 38 |
| நீண்ட பெருமூச்சுக்கள் | 39 |
| அப்பாவும் அம்மாவும் | 40 |
| வாடைக் காற்றே | 41 |
| கரைவும் விரிவும் | 43 |
| வயிறுகள் | 45 |
| 81 மே 31 இரவு | 46 |
| கானல் வரி | 48 |
| தொடரும் நிலைகள் | 50 |
| கொடியும் கொம்பும் | 51 |
| பலஸ்தீனமும் எனது மண்ணும் - 1 | 52 |
| அகலிப்பு | 54 |
| புரிதல் | 55 |
| இக்கணத்தில் வாழ்ந்துவிடு | 57 |
| பீனிக்ஸ் | 60 |
| தலைப்பிடப்படாதது | 61 |
| வெல்பவர் பக்கம் | 62 |
| கைவிடப்பட்டோர் | 63 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| உதிர்வு | 64 |
| பெயர்வு | 65 |
| பதிவைப்பு | 66 |
| அம்மாவின் மரணம் | 67 |
| கூடும் குரலும் | 68 |
| குளிர்கால மரம் | 69 |
| யன்னல் | 71 |
| கனவுகளுக்கு வாழ்த்துக்கள் | 72 |
| ஒரு ஞாயிறு மாலை | 73 |
| இழப்பு | 75 |
| நண்பனுக்கு | 76 |
| மண்ணும் மனமும் | 78 |
| மைனா விடு தூது | 80 |
| தனிமை | 82 |
| வல்லூறும் வெண்புறாவும் | 83 |
| தலைப்பிடப்படாதது | 86 |
| வசதியாக | 87 |
| கண்ணாடி | 88 |
| அந்தியின் மின்னல் | 89 |
| கோடை | 90 |
| ஓயாத அலை | 91 |
| தலைப்பிடப்படாதது | 92 |
| அம்மாவின் முகங்கள் | 93 |
| தலைப்பிடப்படாதது | 94 |
| மரம் பற்றியோர் பாடல் | 95 |
| பலஸ்தீனமும் எனது மண்ணும் - 2 | 97 |
| வெண்புறா | 99 |
| பொய்களின் திருவிழா | 100 |
| மீறல் | 101 |
| யாரது | 102 |
| வல்லமை சேராயோ... | 103 |
| தேம்ஸ் நதியே | 104 |
| கவிதை | 105 |
| அலைவு | 106 |
| ஸ்ராலின் கைகுலுக்க மறுத்தபோது | 108 |
| செங்கோல் | 111 |
| தலைப்பிடப்படாதது | 112 |
| புலம் பெயர்ந்தோர் | 113 |
| புள்ளியில் மனம் | 114 |
| சிறு ஓய்வில் | 115 |
| திரைகளின் பின்னால் | 116 |
| மீண்டும் வரும் நாட்கள் | 117 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I carry our nation wherever I go,
and the oh-so-far-away essences of my
elongated homeland live within me.

**Pablo Neruda**

# பதிப்புரை

தமிழியல் ஈழத்தின் பதிப்புத்துறையில் தன் காலடிகளைப் பதித்த போது ஈழத்து வெளியீட்டுலகம் அவ்வளவு பிரகாசமாக இருக்க வில்லை. அத்திப்பூவாய் ஆங்காங்கே எழுதியவர்களின் அரும்பெரும் முயற்சியால் நூல்கள் வெளியாவதும் அவையும் சேற்றில் விழுந்த கல்லாய் எதிர்வினையற்று முடங்கிப்போவதுமே இயல்பாய் இருந்தது. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஈழத்து நூல்களைப் பதிப்பிக்க ஸ்தாபனரீதியாக மேற்கொண்ட செயற்பாடுகள்கூடப் பலிதமாகவில்லை. அச்சிடும் செலவு, நிதிநெருக்கடி, நூல்களை வாங்கி ஆதரிக்க அமைப்புகள் இன்மை, வாசக ஆதரவின்மை என்ற காரணங்களுக்கப்பால் ஈழத்தின் பதிப்புத்துறை பற்றிய நீண்டகால நோக்கிலான தரிசனமின்மையும் நிலவியது.

தமிழியல் இலக்கியம், சமூகம், அரசியல் சார்ந்த ஆக்கபூர்வமான உணர்வுகொண்டவர்களின் தார்மீக பலத்துடன் ஈழத்து நூல் வெளியீடு பற்றிய இருப்புநிலை குறித்தும், வெளியீட்டை வேண்டிநிற்கும் படைப்புகள் குறித்தும் திட்டவட்டமான நோக்கினைக் கொண்டிருந்தது.

எண்பதுகளின் ஆரம்பத்தில் தமிழியலின் தோற்றத்திற்கு முன்ன ரான பூர்வாங்க முயற்சிகள் போன்று தத்துவம், இலக்கிய வரலாறு, சிறுகதைகள், கவிதைகள், விமர்சனங்கள் என்று பல்துறை சார்ந்தும் ஏறத்தாழ இருபது நூல்களைத் தமிழகத்தில் பிரசுரிக்க மேற்கொண்ட முயற்சிகள் பதிப்புத்துறையில் எமது நம்பிக்கை வேருக்கு நீர்பாய்ச்சின.

ஈழத்து ஆக்கங்களைத் தமிழகத்தில் பதிப்பிக்கும் பணியில் செ. கணேசலிங்கனின் பங்கு கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். கலாநிதி க. கைலாசபதியைத் தமிழகத்தில் அறிமுகப் படுத்திய நூலான அவரின் *தமிழ் நாவல் இலக்கியம்* (1968)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ.கணேசலிங்கனின் முயற்சியினாலேயே பாரி நிலையம் வெளியீடாகத் தமிழகத்தில் பிரசுரம் பெற்றது. அ.ந. கந்தசாமி, யோ. பெனடிக்ற் பாலன் ஆகியோருடைய நூல்களுடன் செ. கணேசலிங்கனின் அனைத்து நாவல்களும் தமிழகத்திலேயே வெளியாகின. செ. கணேசலிங்கனின் *நீண்ட பயணம்* (1965), *செவ்வானம்* ஆகிய நாவல்கள் தமிழகத்தில் நன்கு அறியப்பட்ட நாவல்களாகத் திகழ்ந்தன. சோ. சிவபாதசுந்தரத்தின் *மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்* (1947) என்ற நூல் தமிழகத்தில் வெளியானபோது பயண இலக்கியத்தில் புதிய பாதையை அது திறந்துவைத்தது என்று கூறலாம்.

*கௌதம புத்தர் அடிச்சுவட்டில்* (1960), *சேக்கிழார் அடிச்சுவட்டில்* (1978) ஆகிய சோ. சிவபாதசுந்தரத்தின் நூல்கள் தமிழகத்தில் பெருங் கணிப்பினைப் பெற்ற நூல்களாகும். ராஜாஜியின் முன்னுரையுடன் தமிழகத்தில் வெளியான அவரின் *ஒலிபரப்புக்கலை* (1954) ஒலிபரப்புத் துறையில் வெளியான மிகச்சிறந்த நூலாக இன்றளவும் பேசப்பட்டு வருகிறது. கி. லக்ஷ்மண ஐயரின் *இந்திய தத்துவஞானம்* பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடாகப் பல பதிப்புக்களைக் கண்ட நூலாகும்.

ஈழத்து நூல்களை வெளியிடுவது என்ற நோக்குடன் தமிழகத்தில் ஈழத்து சிருஷ்டிகளை அறிமுகப்படுத்தும், பரவலாக்கும் நோக்கும் தமிழியலின் பதிப்பு முயற்சிகளின் அடிநாதமாக இருந்தன. கே.கணேஷ், கந்தையா நவரேந்திரன், கா. கைலாசநாத குருக்கள், எம்.ஏ. நுஃமான், என்.கே. மகாலிங்கம், சேரன், குப்பிளான் ஐ. சண்முகன், சி. சிவசேகரம், மு. தளையசிங்கம், அ. யேசுராசா, சி.வி. வேலுப்பிள்ளை ஆகிய ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகள் தமிழகத்தின் வாசிப்புப்பரப்பிற்குக் கொண்டுவரப்பட்டன. தமிழகத்தின் க்ரியா, நர்மதா பதிப்பகம், பொதுமை வெளியீடு, காவ்யா, கோவிந்தனின் சமுதாயப் பிரசுராலயம், மீனாட்சி பிரசுராலயம் ஆகிய முன்னனிப் பதிப்பாளர்கள் எமது நூல்களை வெளியிட்டு எமது பதிப்பு முயற்சிக்கு மிகுந்த ஆதரவு தந்தனர். அமரர் கோவிந்தன் தனது சமுதாயப் பிரசுராலயத்திற்கூடாக மு. தளையசிங்கத்தின் ஐந்து நூல்களைப் பதிப்பித்து எமக்குப் பேரூக்கம் தந்ததை நாம் நன்றியோடு நினைவுகூர்கிறோம்.

*கம்பனும் மில்டனும்* போன்ற நூல்களைத் தந்த அமரர் எஸ். ராமகிருஷ்ணன், சுந்தர ராமசாமி, கி.ராஜநாராயணன் போன்றோர் ஈழத்து நூல்களைத் தமிழகத்தில் பதிப்பிக்கும் முயற்சிக்குப் பெருந் துணையாக இருந்திருக்கிறார்கள். சி. சிவசேகரத்தின் *நதிக்கரை மூங்கில்* (1983) காவ்யா சண்முகசுந்தரத்தின் இனிய ஒத்துழைப்பின் நல் அறுவடையாகும். கே.கணேஷின் தமிழாக்கத்தில் உருவான *போர்க்குரல்* (1981) (லூ சுன் சிறுகதைகளின்) தொகுதியையும், சேரனின் *இரண்டாவது சூரிய உதயம்* (1983) கவிதைத் தொகுப்பையும் தமிழகத்தில் பதிப்பிக்கும் முயற்சிக்கு எஸ்.வி. ராஜதுரை நிறைந்த ஆதரவு நல்கினார்.



1970களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தின் கலாசாரவெளியில் ஏற்பட்ட மாற்றங்கள் தமிழியலின் செயற்பாடுகளுக்கு உரமூட்டின. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தோற்றமும் அதனையொட்டி மட்டக்களப்பு, மலையகம் சார்ந்த இலக்கியவாதிகளின் வருகையும் இலக்கியப் பரிவர்த்தனைகளும் காத்திரமான சூழலை உருவாக்கின. பல்கலைக்கழக சமூகத்திற்கும் இலக்கிய உலகிற்கும் இடையிலான உறவுகள் பல்வேறு தளங்களில் பலம் கொண்டன.

கலை, இலக்கிய, நாடக மையமாகக் கொழும்பு திகழ்ந்த நிலையிலிருந்து யாழ்ப்பாணம் அரங்கச் செயற்பாடுகளின் தளமாக மாறியது. நாடக உலகின் சர்ச்சைகள் இலக்கிய உலகில் முதன்மை பெற்றுத் திகழ்ந்தது. *மல்லிகை, அலை, சமர்* ஆகிய சஞ்சிகைகள் இக்காலத்தின் முக்கிய இலக்கிய வெளியீட்டுக்களங்களாக அமைந்தன. *வைகறை, அலை, முத்தமிழ் வெளியீட்டுக் கழகம்* ஆகியன புதிய இலக்கியப் பரப்புகளில் தமது வெளியீடுகளைத் துணிச்சலோடு கொணர்ந்தன. யாழ்ப்பாணத்தில் Saturday Review என்ற ஆங்கில வாரப்பத்திரிகையின் வரவும், கொழும்பில் இருந்து வெளியான Lanka Guardian இதழும் இந்தக் கலாசாரவெளியில் தாக்கத்தை ஏற்படுத்தவே செய்தன. சிங்களத் திரைப்பட இயக்குநர் தர்மசேன பத்திராஜா, ஆங்கில இலக்கிய விமர்சகர் ரெஜி சிரிவர்த்தன, ஏ.ஜே. கனகரட்னா ஆகியோரின் கலை, இலக்கிய ஆளுமைகளும் இக்காலகட்டச் சூழலைப் பாதித்திருந்தன. இக்காலகட்டத்தில் *அலை வெளியீடாக* வெளியான ஏ.ஜே. கனகரட்னாவின் தமிழாக்கத்திலான இரு நூல்கள், மைக்கேல் லோவியின் *மார்க்சியவாதிகளும் தேசிய இனப் பிரச்சினையும்* (1978) மற்றும் *மார்க்சியமும் இலக்கியமும்: சில நோக்குகள்* (1981), தீவிர வாசிப்புக்குள்ளாகின.

அரசியல், சமூகத் தளங்களில் சிங்களப் பெருந்தேசியவாதத்தின் ஒடுக்குமுறை எழுபதுகளில் கூர்மையுற்றது. 1977இன் இனக்கலவரம், தமிழர்கள் மீதான அரசின் உதாசீனம், 1978இல், பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்களின் அனுமதி பற்றிய சிறில் மத்தியூவின் இனத்துவேசக் கருத்துகள், 1978இல் மட்டக்களப்பு புயலால் உருக்குலைந்தபோது வெளிநாட்டு அரசு கொடுத்த நிவாரண உதவிகளைக் கூட அங்கு வழங்க மறுத்த அரசின் காழ்ப்புணர்ச்சி, மலையகத் தோட்டப்பகுதிகளில் சிங்களக் காடையர்கள் தமிழ்த் தொழிலாளர்கள் மீது நடத்திய வெறியாட்டங்கள் என்பன தமிழ் அரசியலில் அதிர்வலைகளை எழுப்பின. 1979இல் பயங்கரவாதத் தடைச்சட்டம் நிறைவேற்றப்பட்டு, தமிழ்ப் பகுதிகளில் இராணுவம் நினைத்ததைச் செய்வதற்குக் கட்டற்ற சுதந்திரம் வழங்கப்பட்டது. பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கென்று யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட பிரிகேடியர் வீரதுங்கவின் கொடூரமான இராணுவ அடக்குமுறைகள் தமிழ் மக்கள் நெஞ்சில் ஆறாத ரணமாகப் பதிந்தன. பயங்கரச் சித்திரவதைக்குட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட நிலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இன்பம், செல்வம் என்ற இளைஞர்களின் சடலங்கள் பண்ணைக் கடற்கரையில் வீசப்பட்டுக் கிடந்தன.

ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்திவிட்டு சிங்கள இராணுவம் யாழ். பொதுசன நூல் நிலையத்தைத் தீக்கிரையாக்கிய கொடூர சம்பவம் உலகெங்கும் வாழும் நூல் அபிமானிகளின் நெஞ்சிலே கனல் பரப்பியது. யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சேகரித்த ஒருநாள் நிதியில் தமிழகத்திலிருந்து புத்தகங்களைப் பெற்றுவரும் பொறுப்பை திரு. பத்மநாப ஐயரிடம் ஒப்படைக்கலாம் என்று நான் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆலோசனை கூறியபோது மாணவருலகமும் அதை அங்கீகரித்தது. தமிழகத்திலிருந்து தனியே புத்தகப் பொதிகளை யாழ்ப் பாணத்திற்கு கொண்டுவந்துசேர்த்த பத்மநாப ஐயரின் உழைப்பு அரியது.

1983இல் இலங்கையில் ஏற்பட்ட இனசங்காரத்தின்போது தமிழ் மக்களது இருப்பும் வாழ்வும் கேள்விக்குறியாகின. அரச பயங்கரவாதத் தின் கோரம் தமிழ் மக்களில் ஆழமாகப் பதிந்தது. ஈழத்து அரசியலின் பின்புலமாகத் தமிழகம் மாறிய காலகட்டத்தில் தமிழியல் தீர்க்கமான முன்னோக்குடன் தமிழகத்தில் பதிப்பு முயற்சிகளை மேற்கொண்டது. யாழ். நூல் நிலையம் தீக்கிரையாக்கப்பட்ட கலாசாரப் பேரழிவின் பின் ஈழத்தமிழரின், அரசியல், இலக்கிய, கலாசாரச் செயற்பாடுகள் பதிவாக வேண்டும் என்ற சிந்தனை வலுப்பெற்ற நிலையில் தமிழியல் வேகம் கொண்டது.

ஈழத்தமிழரின் படைப்பு முயற்சிகளுக்கும் அவை நூல்வடிவம் பெறு வதற்கும் இடையிலான பாரிய இடைவெளியைத் தமிழியல் இனங் கண்டது. முப்பதுகளிலும் நாற்பதுகளிலும் எழுத்துலக முன்னோடி களாகத் திகழ்ந்தவர்கள் பற்றி இளைய தலைமுறைக்கு எடுத்துக்கூற, அவர்களின் படைப்புகள் நூல்வடிவம் பெறவேண்டிய தேவையைத் தமிழியல் உணர்ந்தது. வரலாற்று முக்கியத்துவம்கொண்ட நூல்கள் பல மறுபிரசுரம் நாடிநின்றன.

சிறுகதை, நாவல், கவிதைக்கு அப்பால் அரசியல் எழுத்துகள், வரலாறு, சமூகவியல், பண்பாடு, ஓவியம் போன்ற பன்முகப்பட்ட துறைகளிலும் நூல் வெளியீடுகள் விரிவாக்கம் பெற்றாக வேண்டிய தேவையை தமிழியல் பிரக்ஞைபூர்வமாக உணர்ந்தது. ஈழத்துத் தமிழரின் தலையாய பிராந்தியப் பத்திரிகையாக வெளிவந்த *ஈழநாடு* இதழில் ந. சபாரத்தினம் அவர்கள் எழுதிவந்த ஆசிரியத் தலையங்கங் கள் தமிழ் மக்களது தார்மீகக் குரலின் வெளிப்பாடாகவே அமைந்தன. ஒரு நாளிதழின் தலையங்கங்கள் ஒருநாள் சாம்ராஜ்யத்தில் விகசித்து மங்கிவிடுபவை. ஆனால் தமிழர்தம் அரசியல் வாழ்வின் நெருக்கடி யான காலப் பகுதியின் அசலான பதிவுகளாக அமைந்த சபாரத்தினத் தின் ஆசிரியத் தலையங்கங்கள் தொகுக்கப்பட்டு நூலாக வருவது



முன்னோடி முயற்சியாகும். *ஊரடங்கு வாழ்வு* (1985) என்ற இந்த அரசியல் பத்தி எழுத்துகளை நூலாக்கி உதவ அமரர் கோவிந்தன் இசைந்திருந்தார் என்பதை நன்றியுடன் நினைவுகூர்கின்றோம்.

பொ. ரகுபதியின் Early Settlements in Jaffna என்ற ஆய்வேடு பத்மநாப ஐயரின் துணிச்சலான செயற்பாடுகளால்தான் நூல்வடிவம் பெற்றது என்பதும் இங்கு பதிவு பெறுவதற்குரிய செய்தியாகும். அவ்வாய்வேடு நூல்வடிவம் பெறவேண்டும் என்ற பெருவிருப்புடன் அவ்வாய்வேட்டை இயக்கப்படகுவழியாகத் தமிழகம் கொண்டுசென்ற திலிருந்து, சென்னையில் ஒரு வெள்ளிகூட இல்லாத நிலையிலும் அதனை ஒளிப்பதிவில் எழுத்துருவாக்கி அந்நூல் பூரண வடிவம்பெறும் வரை அவர் அந்நூலாக்கத்தில் காட்டிய சிரத்தை அசாதாரணமானது.

எண்பதுகளின் பின் யாழ். குடாநாடு யுத்தபூமியாக மாறிய நிலை யிலும் ஈழத்தின் தனித்துவத்தைக் குறிக்கும் கலைப்பரிமாணங்களிலும் தமிழியல் காட்டிய அபூர்வ அக்கறையின் வெளிப்பாடு *தேடலும் படைப் புலகமும்* (1987) என்ற ஓவிய, சிற்பத்துறை நூலாகும். ஈழத்தின் நவீன ஓவிய முன்னோடியான மாற்குவின் ஓவியங்களை முன்வைத்து வெளியான *தேடலும் படைப்புலகமும்* என்ற தொகுப்பிற்காக பத்மநாப ஐயர் தமிழகத்தில் ஓவியக் கலைஞர்களின் ஆக்கங்களைத் திரட்டிய சந்தர்ப்பத்தில் நானும் அவருடன் சென்றிருக்கிறேன். பத்மநாப ஐயரின் தொலைநோக்குடன்கூடிய அயராத தேடலின் அறுவடை அது. யாழ்ப்பாணத்தில் கைகூடிவரக்கூடிய ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அச்சக வசதிகளுடனும் பொருளாதாரக் கஷ்டங்களுடனும் *தேடலும் படைப் புலகமும்* வெளியானபோது தமிழகத்திலும் அது ஓவியக் கலைஞர் களால் வெகுவாகச் சிலாகிக்கப்பட்டது.

சாந்தி சச்சிதானந்தனின் *பெண்களின் சுவடுகளில்...* (1989) தாய்வழிச் சமூகத்தின் பரிணாம வளர்ச்சியை விளக்கும் முக்கிய நூலாகத் தமிழில் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. புதிய புதிய துறைகள் சார்ந்தும், பரவலான கவனஈர்ப்பைப் பெறாத சீரிய எழுத்துக்கள் குறித்தும் தமிழியல் விசேஷ அக்கறை கொண்டிருக்கிறது. கைலாசநாத குருக்களின் *வடமொழி இலக்கிய வரலாறு* (1981) நூலிலிருந்து சண்முகம் சிவலிங்கத்தின் *நீர்வளையங்கள்* (1988) வரை இது பரந்து விரிந்திருக்கிறது.

தமிழகத்தில் தமிழியலின் பதிப்பு முயற்சிகளில் உறுதுணையாக இருந்தவர்கள் இருவர்: ஒருவர், தமிழ்ப் பதிப்புத்துறையினைப் புதியதோர் திசையில் இட்டுச்சென்ற க்ரியா எஸ். ராமகிருஷ்ணன்; *பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்* (1984), *ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி* (1984) முதலான ஐந்து ஈழத்து நூல்களை 'க்ரியா' வெளியீடாகக் கொணர்ந்தவர். மற்றவர், 'வயல்' சி.மோகன்; விமர்சனம், புனைகதை, ஓவியம், சினிமா, உலக இலக்கியம் எனப் பல்துறை ஆளுமை மிக்கவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து இலக்கியத்தை ஆங்கிலத்திற்கும் ஏனைய மொழிகளுக்கும் எடுத்துச்செல்லும் பெரும் இலக்கையும் தமிழியல் கொண்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு ஆக்கங்களை இனங்கண்டும், தகுதிகண்டும் உரிய எழுத்துகளை அடையாளப்படுத்தியும் முன்னெடுக்கப்பட வேண்டிய பெரும் இலட்சியத்திலும் தமிழியல் ஆழ்ந்த சிரத்தையை வெளிப் படுத்துகிறது.

தமிழியல் பதிப்பு முயற்சிகள் பத்மநாப ஐயரின் பேருழைப்பின் அறுவடை. அவரின் இலக்கியக் கனவுகள் விசாலமானது; தொடுவான எல்லையில் விரிவது.

வாசகர் வட்ட வெளியீடாகத் தமிழகத்தில் வெளியான *அக்கரை இலக்கியம்* (1968) தொகுப்பு முயற்சியிலிருந்து இன்றுவரை அயராது பதிப்புப்பணிகளில் ஈடுபட்டுவரும் பத்மநாப ஐயரின் செயற்பாட்டால் ஈழத்து நூலாக்க முயற்சிகள் பலம் பெற்றுள்ளன.

மாறுபட்ட சிந்தனைப்போக்குகளையும் அங்கீகரிக்கும் மனவிசால மும் நூல்தேட்டத்தின் மீதான தணியாத தாகமும் சர்வதேசத் தொடர் பாடல் ஒழுங்கும் அவரின் பதிப்பு முயற்சிகளுக்குக் கௌரவம் சேர்ப் பவை. எழுத்தாற்றல்களை மிகத்துல்லியமாக இணங்கண்டு அவற்றை ஊக்குவிப்பதில் ஐயர் சளைத்துப்போவதேயில்லை. ஐயரின் உலகம் எழுத்தாளர்களின் உலகம்தான்; புத்தகங்களின் உலகம்தான். இதுதான் அவரின் மிகப்பெரும் பலம் என்று படுகிறது.

அனைத்துலகு தழுவிய நோக்கில் அவர் தொகுத்து வெளியிட்ட லண்டன் தமிழர் நலன்புரி சங்க ஆண்டுத் தொகுதிகளான *10ஆவது ஆண்டுச் சிறப்பு மலர்* (1996), *கிழக்கும் மேற்கும்* (1997), *இன்னுமொரு காலடி* (1998), *யுகம் மாறும்* (1999), *கண்ணில் தெரியுது வானம்* (2001) ஆகிய தொகுதிகள் சமகாலத் தமிழ் இலக்கியச் செல்நெறி யினை நாடிபிடித்துப்பார்க்க உதவுவன. ஓவிய வெளிப்பாடுகளையும் அவர் பிரக்ஞைபூர்வமாகவே தனது நூல் தொகுதிகளிலே இணைத் திருக்கிறார்.

லண்டனில் பத்மநாப ஐயரின் இலக்கிய வெளியீட்டுக் கனவுகள் ஓவியர் கே.கே. ராஜாவின் தூரிகையின் சாதுரியத்தில் வண்ணங்களின் கலவையில் - கோட்டோவியங்களின் அழுத்தங்களில் - வடிவமைப்பின் ஒழுங்கில் - பரீட்சார்த்த மனோலயத்தில் - கணனியின் அசல் பரிச்சயத்தில் - இரவுக்கும் பகலுக்கும் பேதம் தெரியாத உழைப்பின் வியர்வையில்தான் சாத்தியப்பட்டன என்றால் அது மிகையாகச் சொல்வது ஆகாது. நியூஹாம் தமிழர் நலன்புரி சங்க வெளியீடாக வெளிவந்த அனைத்துத் தொகுப்புகளின் ஒவ்வொரு பக்கமும் ராஜாவின் பேருழைப்பில் ஊறித் தோய்ந்தது. இவை ராஜாவின் விளக்கப்படங்கள் என்றாலும் - எழுத்துப் பிரதியின் கற்பனார்த்த கட்புலமொழியில் அவை சுயத்துவமான ராஜாவின் கம்பீரமான கலைப்படைப்புகளாகவும் பிரசவம் கண்டிருக்கின்றன. ரெம்ப்ராண்ட்டும் மைக்கேல் அஞ்சலோவும் தீட்டிய உன்னத ஓவியங்கள் பைபிள் சித்திரங்கள்தான் என்றாலும் அவை அக்கலைஞர்களின் சுயத்துவ வெளிப்பாடாகவே பாராட்டுப் பெறுகின்றன. பத்மநாப ஐயரின் மலர்களில் இடம் கிடைக்கப்பெற்ற படைப்பாளிகள் பாக்கியசாலிகள் தான். தன் நுணுகிய வாசிப்பில் எழுத்துருக்களின் ஆத்மாவைத் தரிசித்து அதனைக் கோடுகளில், வண்ணங்களில், தனது கற்பனையின் விகசிப்பில் தீட்டி வெளிப்படுத்திய ராஜாவின் விளக்கப்படங்கள் தனித்துவ கலை ஆய்வுக்குரியன. பிரார்த்தனைக்கு இனிய கீதங்கள் போல இந்நூல் தொகுதிகளின் பெருவெற்றிக்கு ராஜாவின் ஓவியங்கள் ஆதாரமாக அமைந்திருக்கின்றன.



இன்று தமிழில் பதிப்புத்துறை கணிசமான வளர்ச்சி கண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. புதிய பதிப்பாளர்களின் வரவும், புதுமை முயற்சிகளில் நாட்டமும் இந்தப் புதிய வளர்ச்சியின் முக்கிய அம்சங் கள். வன்னியிலிருந்து வெளியாகும் நூல்களின் வடிவநேர்த்தி நம்மைப் பிரமிக்கவைக்கின்றது. கனடாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் காத்திர மான நூலாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. சுவாமி விபுலானந்த அடிகள் இயற்றி 1947இல் முதற்பதிப்புக் கண்ட *யாழ் நூல்*; வி.சீ. கந்தையா எழுதி 1964இல் முதன்முதலில் வெளிவந்த *மட்டக் களப்புத் தமிழகம்* போன்ற பழைய நூல்கள் வெகு சிரத்தையோடு மீளப்பதிப்பிக்கப்பட்டு வருவது சிலாகிக்கத்தக்கதாகும்.

ஈழத்து எழுத்துலகில் புத்தகச் சந்தை வியாபாரிகளின் பிரவேசமும் அதிகரித்துள்ள சூழலில் தமிழியல் பதிப்புத்துறையில் தன் பணியை விசாலித்திருப்பது நம்பிக்கை தருவதாகும். இது பவுண்களாலும் டொலர்களாலும் உருவாவதில்லை. திரண்ட நோக்கு, அயராத தேடல், பாரிய உழைப்பு, கூட்டு ஒத்துழைப்பு ஆகிய ஆதாரதளங்களில் எழுப்பப்படும் இலட்சிய வேள்வி இது.

❍

தமிழியல் மீண்டும் நடைபோட நேசக்கரம் தருபவர்கள் இன்று முன்னனியில் நிற்கும், விரைந்து செயற்படும் காலச்சுவடு பதிப்பகத் தினர். அவர்களுடன் இணைந்து புதிய சில எல்லைகளைத் தொடு வோம் என்பது எமது ஆவல்; நம்பிக்கையும்கூட.

இன்று மீண்டும் புதிய அனுபவங்கள், தரிசனங்களுடன் தமிழியல் தொடங்கும் பயணம் கவிஞர் மு. புஷ்பராஜனின் கவிதைத் தொகுப் புடன் கம்பீர ஆரம்பத்தைக் காட்டி நிற்கின்றது.

*அம்பா* (1976) என்ற குருநகர் மீனவ நாட்டார் பாடல்களின் தொகுப் பின் மூலம் தமிழ் இலக்கிய உலகின் தனித்துவ கவனத்திற்குள்ளான வர் புஷ்பராஜன். உலகில் கடல்சார் நாட்டுப் பாடல்கள் எங்குமே மிக மிக அபூர்வமாகவே காணக்கிடைக்கின்றன. தமிழில் மீனவ நாட்டார் பாடல் பற்றி எழுந்த முதல் தொகுப்பு என்ற உயரிய பெருமையை *அம்பா* வகிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலை ஆசிரியர் குழுவிலும் செயற்பட்டிருந்த புஷ்பராஜன் ஆரவார இலக்கியச் சந்தையிலிருந்து வெகுதூரம் விலகி இருப்பவர்.

மு. தளையசிங்கம், ஏ.ஜே. கனகரட்னா ஆகியோரின் சூழலில் தன் சமூக, இலக்கியப் பார்வையைச் செதுக்கிக்கொண்டவர். இலக்கியத்தின் மனுக்குல தரிசனத்தின் உயர்ந்த, விரிந்த சாத்தியப்பாடுகள் பற்றிய நம்பிக்கை மிக்கவர். சோவியத் எழுத்துகளில் இருந்து கம்பூலாவின் கரையிலிருந்த லத்தீன் அமெரிக்க அரசியல் வரை புஷ்பராஜனின் பார்வை அகன்றது. திரைப்பட ரசனையும் புஷ்பராஜனின் பிறிதொரு பலமான தளமாகும்.

"குருநகர்: கடலோரத்தில் ஒரு கல்வாரி" என்னும் தீபம் தொலைக்காட்சியின் குருநகர் விவரணப்படத்திலும் புஷ்பராஜன் உழைத்திருக்கிறார்.

கவிதையுடன் சிறுகதை, நூல் விமர்சனம் ஆகியவற்றிலும் புஷ்பராஜன் தடம் பதித்திருக்கிறார்.

இன ஒடுக்குமுறைக்கு எதிரான கனற்பொறிகளைக் கவிதையிலே தூவிவிட்டிருக்கும் புஷ்பராஜனின் தார்மீக ஆவேசம் மெய்யானது. 'காவலுக்கு வந்தவர்கள் கதிரறுத்த கதையை' ஒப்ப மறுக்கும் நெஞ்சம் அவருடையது. புகலிடவாழ்வின் சோகங்களை மெல்லிய நீர் வட்டங்களாய் விரித்துப் பேசும் அவரின் கவிதைகள் உள்ளொளியின் விகசிப்புகள்.

ஈழத்துக் கவிதையுலகில் நன்கு அனுபவப்பட்டிருக்கும் புஷ்பராஜனின் கவிதைகளில் சில ஆங்கிலத்திலும் கன்னடத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. எனினும் தொகுப்பாகக் கனிந்து வருவதற்கு நீண்ட காலம் எடுத்திருக்கிறது என்றுதான் கூறவேண்டும்.

லண்டன்
வைகாசி 2004

மு. நித்தியானந்தன்
தமிழியல் சார்பாக



## துயரிலும் மனம் நிமிர்ந்தெழவைக்கும் கவிதைகள்

கவிஞர் புஷ்பராஜனை நினைத்ததுமே எழுபதுகளிலிருந்து எண்பதுகளின் இறுதிவரை அவரோடு பழகிய காலங்களே, கவிதைபோல் இன்துயர் தருவதாய் அல்லது இன்சுகம் தருவதாய் மேலெழுகின்றன.

நான் எழுபதுகளின் ஆரம்பத்தில் *சத்தியம்* பத்திரிகை வெளியிட்டுக் கொண்டிருந்த காலத்தில், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் தங்கியிருந்தபோது, அங்கே புஷ்பராஜன் என்னை அடிக்கடி சந்திக்க வருவார். அப்போதெல்லாம் கவிதை, சிறுகதை, இலக்கிய விமர்சனம் என்று பலவற்றைக் கதைத்துக் கொள்வோம். அது இனிமையான நினைவுகளைக் கசியவைக்கும் காலமாகும். பின்னர் அவர் *அம்பா* என்னும் மீனவ மக்களிடையே வழங்கும் பாடல்களை அறிமுகப்படுத்தும் தொகுதி ஒன்றினை வெளியிடும் நோக்கோடு, அதன் கையெழுத்துப் பிரதியை என் பார்வைக்குத் தந்திருந்தார். அக்காலத்தில் புங்குடுதீவுக்கும் வந்தார். தளையசிங்கத்தையும் சந்தித்துப் பலவற்றைக் கதைத்தார்.

இன்னும் இவர்மூலமே எனக்கு அ. யேசுராசா அறிமுகமானார். யேசுராசாவின் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவுக்கு நான் தலைமை தாங்கினேன். அச்சந்தர்ப்பத்தில் குருநகர் மக்கள் எவ்வாறு திரண்டுவந்து தம்மூர்க் கலைஞர்களுக்கு ஆதரவை வழங்கினார்கள் என்பதைக் கண்டு வியந்தேன். அவர்கள் காட்டிய அன்பும், அவர்கள் வாழ்ந்த சூழலும் இன்னும் பசுமையான, சுகம் தருகின்ற நினைவாகவே நீள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றோடு *நெய்தல்* வெளிவந்த காலத்தில் புஷ்பராஜனுக்கும் எனக்குமிடையே இன்னும் இறுக்கமான நட்பும் தொடர்பும் ஏற்படுவதாயிற்று. *நெய்தல்* மலரில் எனது 'பிறையொரு காலம் முழுநிலவாகும்' கவிதை பிரசுரிக்கப்பட்டது. அதற்கு புஷ்பராஜனே தூண்டுகோலாய் இருந்தார். பின்னர் அவர்கள் *அலை* சஞ்சிகை வெளியிட்டபோதும் என்னுடைய பங்களிப்பும் கோரப்பட்டது. *அலை* இரண்டாவது இதழில் எனது 'சுய ஆட்சி' என்ற கவிதை முகப்புக் கவிதையாகப் பிரசுரிக்கப்பட்டது.

மு.புஷ்பராஜனோடு சம்பந்தப்பட்ட காலங்கள் முழுக்க முழுக்கக் கலை, இலக்கியத்தோடு சம்பந்தப்பட்ட காலமாக, ஓர் இனிய கனவாகவே என் முன் எழுகிறது.

இவற்றையெல்லாம் ஏன் இங்கே எழுதுகிறேன்?

புஷ்பராஜனின் கவிதைகளுக்கும் இவற்றிற்கும் என்ன சம்பந்தம்? இது நியாயமான கேள்வியே.

ஆனால் கடந்தகாலத்தின் ஒரு பகுதியின் அடியில் மண்டிக் கிடக்கும் இந்நினைவுத் திவலைகளில் மனம் லயிக்காது புஷ்பராஜன் கவிதைகளைப் படிக்கமுடியாமல் இருப்பதே அதன் காரணம். நான் விபரித்த நிகழ்வுகளுக்கும் இத்தொகுப்பில் காணப்படும் கவிதைகளுக்கும் நேரடித் தொடர்பு எதுவும் இல்லை. ஆயினும் மனக்கண் என்று கூறப்படுவதன் உள்வாங்கல்கள் நிகழ்த்தும் கோணங்கள் எப்போதும் ஒரே மாதிரியாய் இருப்பதில்லை. சிலருக்கு ரசனையற்றதாகத் தெரிவதை தனக்கு உவப்பானதாக மேலெழவைக்கிறது இது. சில கவிஞர்களின் சாதாரண சம்பவ விபரிப்புகளே, சொல்லப்படும் பின்னணிச் சூழலால் கலைத்துவம் மிக்கதாகவும் இனந்தெரியாத துயர் கவியச் செய்வதாகவும் மாறுவதைக் காணலாம். ஒவ்வொருவரது மனம் லயிக்கும் நிலைகளும் அது தொடர்புபடுத்தும் உணர்வுகளுமே இதற்குக் காரணமாகலாம். இதுவே, சிலருக்குப் பெரிதாகத் தெரியாதவை, இன்னொருவருக்கு அரிய காட்சி விபரிப்பாக மாறுவதன் காரணம் எனலாம்.

இத்தகைய மனநிலையில் புஷ்பராஜனின் கவிதைகளைப் பார்க்கும் போது அவை ஒவ்வொன்றும் எனக்குத் தெரிந்த, புரையோடி என் ஆழ்மனதில் புதைந்துபோன நினைவுகளின் மேலிருந்து வருவனவாய் இருப்பதில் ஆச்சரியமில்லை. அனேகமாக எழுபதுகளிலிருந்து எண்பதுகளின் இறுதிப் பகுதிவரை எழுதப்பட்ட கவிதைகளில் இத்தன்மையை அதிகம் காணலாம்.

முதலாவது, நகரமும் இல்லாது கிராமமும் இல்லாது இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் திகழும் குருநகர் என்னும் கடலோரப் பிரதேசத்தைச் சுற்றிக் கவியும் கவிதைகள்.



இரண்டாவது, வடக்கு கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களின் கழுத்தை நோக்கி வீசப்பட்ட தூக்குக் கயிறாய், அவர்களின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கி வியாபித்துக் கொண்டுவரும் இராணுவப் பயங்கரவாதத்தை வெளிக்காட்டி மௌனித்து நகரும் கவிதைகள்.

மூன்றாவது, இவற்றின் விளைவாய்ச் சொந்த மண்ணை விட்டு நீங்கியதால், மீண்டும் மீண்டும் தன் சொந்த மண்ணில் தான் வாழ்ந்த காலங்களை, துயரும் மகிழ்வும் தரும் அக்காலங்களை, ஒருவகை nostalgic தன்மையோடு மீட்டுப்பார்ப்பன போன்ற கவிதைகள்.

நான்காவதாக, இவற்றுக்கெல்லாம் பின்னணியாகத் தன் ஆத்மார்த்த பார்வையைப் படரவிட்டு அவற்றின் ஒளியில் தன் விடுதலை எழுச்சிக்கு பலம் தேடும் கவிதைகள். இந்நான்கு வகைக் கவிதைகளின் சங்கமிப்பாகவே புஷ்பராஜனின் *மீண்டும் வரும் நாட்கள்* என்ற கவிதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது.

பெர்ணபேத் என்னும் சின்னப் பெரியம்மாவுக்குச் சமர்ப்பணமாக்கப் பட்டுள்ளதைச் சொல்லும் சமர்ப்பணக் கவிதையே குருநகர்ச் சூழலின் நுழைவாயில்போல் நின்று அப்பிரதேசத்திற்கான அருட்டலைத் தருகிறது.

மாமரத்தின் நிழலின்கீழ்
மருந்துக்கு நிற்கையிலே
அருகில் இருந்த
பெர்ணபேத் என்னும்
என்
சின்னப் பெரியம்மாவிற்கு.

இவ்வாறு நுழைவாயில் திறந்துவிட அங்கே சோளகத்தின் அட்டகாசத்தில் ஒடிந்து போன குருநகர்க் கிராமம் வாடைக் காற்றின் வருகைக்காகக் காத்திருந்து அதை ஆவலுடன் வரவேற்பதைக் காணலாம்.

வாடைக் காற்றே
நீ வருக.

வரட்சிகள் நிலவ
சுற்றிச் சுழன் றடித்த
சோளகத்தின் பின்னே வரும்
வாடைக் காற்றே
நீ வருக.

ஓங்கார வெறியோடு
எழுந்து வரும் பேரலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரை யொதுங்கிப் போன
எம்சிறு வள்ளங்கள்
இனி மகிழ்ந்து அலைமோதும்.

சோளகத்தின் பெரும் வீச்சில்
சுகமுண்ட பெருந்தொழில்கள்
வல்லமையை வடித்துவிடும்
வாடையே என் வசந்தமே
வா . . .

இங்கே ஓர் அருமையான செய்தி எமக்கு அறிவிக்கப்படுகிறது. சோளகம் சுழன்றடிக்கையில் அது பணபலம் உள்ளோரின் ஆழக்கடல் சென்றுவரும் பெருந்தொழில் புரிவோரின் சாதகமான காலமாகவே அமையும். ஆனால் அக்காலம் பெரும் பகுதியினரான ஏழை மீனவருக்கு எதிரியாகவே செயல்படுவதால் ஏழைகளின் தோழனான வாடையைக் கவிஞர் வசந்தமாக வரவேற்பது மிகுந்த கவிச்சுவையைத் தருவதாய் உள்ளது. இதன் மூலம் குருநகரின் பெருவாரி மக்கள் ஏழைத் தொழிலாளராகவே இருப்பது தெரியவருகிறது. நாளாந்தம் தமது வாழ்க்கையைக் கொண்டுசெலுத்த அவர்கள் படும்பாடு 'நீண்ட பெருமூச்சுகள்' கவிதையில் மிகத் தத்ரூபமாக, மிகச் சிக்கனமான வார்த்தைகளால் பின்வருமாறு அமைகிறது.

இயலாமை
நீண்ட பெருமூச்சுக்களாய்
மருந்துத் துண்டின்மேல்.

'வயிற்றாலை சத்தி'
பழஞ்சீலையாய் வெளிறிய
குருத்துடல் பாயில்...

அரியும் காற்றில்
அலையும் விளக்கின் ஒளி.

வியாகுலமாதா முன்னே
வழியும் கண்ணீருடன்
வயிறு பசித்திருக்க...

தூரக் கச இருட்டில்
கடலோடு ஒருவன்
கண்விழித்து மாய்கிறான்.

இவ்வாறே 'வயிறுகள்' என்னும் மிகச்சிறுகவிதை, குருநகர் மக்களில் பெரும்பாலானோர் தம் உயிரைத் தக்கவைக்கக் கடலையே நம்பியிருக்கிறார்கள் என்பதை நம் மணக்கண் முன் விஸ்வரூபமாய் விரியவைக்கிறது.



அந்தியின்
மங்கல் அடிவானம்
கருமை ததும்பும் கடல்
களங்கட்டி வலைக்குள்
வயிறுகள் எத்தனையோ...

*(2)*

இத்தகைய வாழ்க்கைப் பிரச்சினைகளோடு போராடிக் கொண்டிருக்கும் மக்கள் முன்னே அவர்கள் குரல்வளைகளை நெரிப்பதற்கென்றே கட்டவிழ்த்துவிடப்பட்ட இராணுவப் பயங்கர வாதம் ஏற்படுத்திய துன்பமும் வேதனையும் சொல்லில் அடங்கா. அவற்றைக் காலங்கடந்தும் எம்மைக் காணவைக்கும் வேகங்கொண்டு அவர் கவிதை வரிகள் நிற்கின்றன.

1981-82களில் இராணுவம் புரிந்த அட்டகாசங்களால் யாழ். நகரமே தீக்குளித்தது. இக்காலத்தில்தான் பிரசித்திபெற்ற யாழ். நூல்நிலையம் எரிந்து சாம்பலாயிற்று. இன்னும் யாழ்ப்பாண நகரத்தின் முக்கிய பகுதிகள், பெரியகடைப் பகுதி என்றழைக்கப் படும் market கட்டடங்கள் எரியூட்டப்பட்டன. எங்கும் அக்கினி யின் கோர நர்த்தனம், அழுகுரல், பீதி என்று யாழ். நகரத்தை அண்டிய பிரதேசங்கள் நடுங்கிக்கொண்டிருந்தன. இவற்றிலிருந்து, மிக அருகிலிருந்த குருநகர் எப்படித் தப்பமுடியும்?

'81 மே 31 இரவு' என்ற கவிதை இக்காலத்தைத்தான் எம் முன்னே கொண்டுவருகிறது.

ராணி
இன்னும் வரவில்லை யென்று
அச்சம் சூழ
வாசலைப் பார்த்தபடி
எனக்காகக் காத்திருப்பாய்.

ஆதரவிற்கு
உன்னருகில் யாருண்டு
வீட்டினுள்ளே
சின்னஞ் சிறுசுகள்
மூலைக் கொன்றாய்
விழுந்து படுத்திருக்கும்.

வெறிச்சோடிய வீதியில்
நாய்கள் குரைக்க
விரைந்தோடிய ஒருவனால்
செய்திகள் பரவ
இன்னும் கலங்குவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைவில்
உறுமும் ஜீப்பின் ஒலியில்
விளக்கை அணைத்து
இருளில் நின்றிருப்பாய்.

உயிரைக் கையில் பிடித்தபடி
குண்டாந் தடிக்கும்
துப்பாக்கி வெடிக்கும்
தப்பியோடிய மக்களில் ஒருவனாய்
என்னை நினைத்திருப்பாய்.

நானோ
நம்பிக்கையின்
கடைசித் துளியும் வடிந்து
மரணத்தருகே.

சூழவும்
உடைபடும் கடைகளின் ஒலியும்
வெறிக் கூச்சலும்
வேற்று மொழியும்
விண்ணுயர்ந்த தீச் சுவாலையும்.

அக்கால யாழ்ப்பாண நகர், அதை அண்டிய பகுதிகள் ஆகியவற்றின் நிலையை கவிஞர் மிக அழகுற எடுத்துக்கூறிச் செல்கிறார். இத்தகைய சம்பவங்களையே, இலங்கையை மாறி மாறி 'அப்பாவும் அம்மாவுமாக' அரசாண்ட ஆட்சியாளர்கள் தமிழ்பேசும் மக்களுக்கு முதுசமாக விட்டுச்சென்றுள்ளனர் என்பதை இத்தொகுப்பின் ஆரம்பக் கவிதைகளில் ஒன்றான 'அப்பாவும் அம்மாவும்' அழகுறக் காட்டுகிறது.

இக்கவிதைத் தொகுப்பில் காணும் முக்கிய அம்சம் (இது ஏனைய கவிஞர்களிடம் காணாத ஒன்றாகவே எனக்குப் படுகிறது) ஒவ்வொரு காலகட்டத் துயரம் தோய்ந்த நிலையிலும் இக்கவிஞர் தனது ஆத்மாவை நிமிர்ந்தெழவைக்கும் ஆத்மார்த்தப் பண்பை மேலெழ வைப்பதன் மூலம் தன்னைச் சோர்வுக்குள் விழாது தடுத்து நிமிர்ந்து நிற்கச் செய்கிறார். முதலாவது பகுதியான குருநகர் வாழ் மக்களின் வாழ்வதற்கான போராட்டங்கள் நிறைந்த, பிரச்சினைகள் நிறைந்த சூழலை எடுத்தியம்பிச் செல்கையிலும் அங்கே கவிஞர் உழைப்புத் தந்த அசதி நீங்கக் குளித்துவிட்டுத் தனித்திருக்கையில் இயற்கையில் ஒன்றிப்போகும் மனம் அவரை அறியாது விரிந்து விரிந்து கவிதைபோல் சுகந்தந்து கரைவதை அவர் 'கரைவும் விரிவும்' கவிதையில் ஏற்றிக் காட்டுகிறார்.

அவ்வாறே இராணுவ அட்டகாசங்களும் அடாவடித்தனங் களும் மலிந்தெழுகின்ற இரண்டாவது கட்டத்திலும் அவரது



ஆத்மார்த்தப் பண்பு அவரை இவற்றையெல்லாம் எதிர்த்து 'பீனிக்ஸ்' பறவையாய் மேலெழ வைக்கிறது. இதை அவரது 'பீனிக்ஸ்' என்ற கவிதை மிக அற்புதமாய் எடுத்தோதுகிறது.

எவ்வகையில்
நீ முயன்ற போதிலும்
அழிவென்பதோ
எனக்கு இல்லை

... ... ... ...
... ... ... ...

என்முகம் சிதைத்து
என்குலம் அழிக்க
எரியும் நெருப்பாய் சூழும் போதெலாம்
புத்தொளி கொண்டு
பீனிக்ஸ் பறவையாய்
மீண்டும் மீண்டும் வானில் பறப்பேன்.

*(3)*

அடுத்த கட்டம் அவர் சொந்த மண்ணில் நேர்ந்த நெருக்கு வாரங்கள் அவரை இடம் பெயர வைக்கிறது. 'பெயர்வு' என்ற கவிதை இதை எடுத்துச்சொல்கிறது 'என் ஜென்ம பூமியின் நினைவுகளுடன் ஏதிலியாய் இறக்க நேரின் சீவியத்தில் நேசித்தவர்கள் ஒரு மெழுகுதிரியை ஏற்றுவார்களா' என்ற அங்கலாய்ப்புடன் வரும் அக்கவிதை ஒருவகையான சுய பச்சாதாபத்தில் விழவைக்கிறது. தொடர்ந்து *பதிவைப்பு, கூடும் குரலும், குளிர்கால மரம், யன்னல், கனவுகளுக்கு வாழ்த்துக்கள், ஒரு ஞாயிறு மாலை, இழப்பு, அம்மாவின் மரணம், மைனா விடு தூது* என்ற கவிதைகள் யாவும் பிரிவுத்துயர் கொண்டவை யாகவும் இழந்துவந்த தொடர்புகளை பல கோணங்களில் மீட்டுப்பார்ப்பவையாகவும் உள்ளன. ஆயினும் அவை தனக் கென ஓர் தனித்துவ உயிர்ப்புடன் திகழ்வதே அவற்றின் சிறப்பு என்றாலும் இவை ஈழத்துப் புலம்பெயர் கவிஞர்களில் பெரும் பாலோரிடம் காணப்படும் ஓர் அம்சம். ஆனால் கவிஞர் தன் கவிதைகளை அத்துடன் நிறுத்தவில்லை. *ஆயின, பலஸ்தீன மும் எமது மண்ணும் - 2, ஸ்ரலின் கைகுலுக்க மறுத்தபோது, திரைகளின் பின்னால், தேம்ஸ் நதியே, பொய்களின் திருவிழா* போன்ற கவிதைகளில் தனது துயர்சுமந்த மனதை வேறு நிலை களுக்குக் கடத்தி வருகிறார். தனது நாட்டின் போராட்டத்தை வேறு நிலைகளில் மாற்றி உருவாக்குகின்றார். ஆனால் இவற்றிற்கெல்லாம் கிரீடம் அமைத்தாற் போல் இங்கே கடைசி யாக இடம்பெறும் 'மீண்டும் வரும் நாட்கள்' நிற்கிறது. மீண்டும் தொய்ந்து போகும் மனதில் ஆத்மார்த்தப் பண்பை மேலெழச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து உரங்கொண்டு நிமிர்ந்தெழ வைக்கிறது இக்கவிதை. இதோ அக்கவிதையின் இறுதி வரிகள்:

முழங்குக ஜெய முரசை
ஏழாம் தூதன் இசைத்த
எக்காளத் தொனி கேட்க
குத்துவிளக்குகள் மத்தியில்
குடியிருக்கும் ஒளியை
மரணம் என்றும்
ஜெயம் கொள்ளாதென
முழங்குக ... முழங்குக

இருந்ததும் இருப்பதும்
இருக்கப் போவதுமான
இருப்பிற்கு
என்றும் வாழ்வென
முழங்குக ... முழங்குக

இதுவே இன்றைய உலகுக்குத் தேவைப்படும் செய்தி. அதை மு. புஷ்பராஜனின் கவிதைத் தொகுதியான 'மீண்டும் வரும் நாட்கள்' மிகச் சிறப்பாகச் செய்துள்ளது.

கொழும்பு மு. பொன்னம்பலம்
09.05.2004



## ஏற்றிய திரியின் ஒளியில்

இது எனது முதலாவது கவிதைத் தொகுப்பு. தாயகத்தில் இருந்த காலங்களில், குறிப்பாக 1988இன் பின்னர், எனது கவிதைத் தொகுதியினை வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப் பட்டது. யுத்தபூமியின் கொதிநிலையில் அப்போது அது கைகூடிவரவில்லை. எமது யுத்தபூமியின் மாறாத விதியாக அமைந்த, குடிமனைகள் மீதான விமானக் குண்டுவீச்சில், அழிக்கப்பட்ட எனது வீட்டோடு சேர்ந்து கவிதைப் பிரதி களும் அழிந்துபோய்விட்டன. அடிக்கடி இடம்பெயர்ந்த அகதி வாழ்விலிருந்து மீண்டபொழுது கண்ணெதிரில் அழிந்துகிடந்த வீடு, சிதைக்கப்பட்ட எனது வாழ்வின் குறி யீடாகவே தெரிந்தது. தமிழ்வாழ்வின் ஆதாரமே அகம், புறம் என்ற பகுப்புகள்தானே. அகத்தை மையப்படுத்தியல்லவா புறவாழ்வு இயங்குகிறது. அகம் இல்லாதபோது புறவாழ்வில் என்ன உயிர்ப்பினைக் கண்டுகொள்ளமுடியும். "தலைசாய்க்க ஓர் இடம்" என்ற கிராமிய வழக்கின் உண்மையான அர்த் தத்தை அங்குதான் உணர முடியும். எதிர்காலம் இருளாய் இறங்கியிருந்த அக்காலத்தில் கவிதைத் தொகுப்பை வெளி யிடும் முயற்சியும் மனதுள் ஒதுங்கிக் கொண்டது.

புலம் பெயர்ந்தபின் வாழ்வின் நெருக்கடிகளின் முற்று கையும், அதிலிருந்து மீளும் முயற்சியுமாகவே வாழ்க்கை அமைந்தது. எதையும் தீர்மானிக்கமுடியாது, கண்களுக்குப் புலனாகா மாய நீரோட்டத்தில் இழுத்துச்செல்லப்படுவதைப் போல் எங்கு நிலையாக வேர்கொள்வது என்பது தீர்மானிக்க முடியாததாகவே இருந்தது. ஓர் ஒதுங்கிய சருகின் நிலையில் அவ்வப்போது கவிதைகள் எழுதியபோதிலும் ஒரு கவிதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பிற்கான சிந்தனையோ, பிரசுர ஆர்வமோ இருந்த தில்லை. இலக்கிய இதழ்கள் நடத்திய நண்பர்களின் வேண்டு தலினால் சில கவிதைகள் அவர்கள் இதழ்களில் பிரசுரிக்கப் பட்டன. சிலவற்றை நானாகவும் அனுப்பியதுண்டு.

2001இல் சு. வில்வரத்தினமும் அ.யேசுராசாவும் லண்டன் வந்திருந்த பொழுது எனது கவிதைத் தொகுப்பைப் பற்றி விசாரித்தார்கள். வில்வன் என கவிதைகள் ஒரு தொகுப்பாக வெளிவர வேண்டுமென வற்புறுத்திக்கொண்டேயிருந்தான். அவர்கள் சென்ற பின்னர் தனிமையில் இருக்கும்பொழுதும், சில புதிய கவிதைத் தொகுப்புக்களைப் படிக்கும்பொழுதும் வில்வன் அழுத்திய விதையில் ஏற்பட்ட வெடிப்பினூடாகத் துளிர்கள் தலைநீட்டத் தொடங்கின.

எழுதிய கவிதைகளைச் சேர்த்தல், வெவ்வேறு தொகுப்புக் களில் சேர்க்கப்பட்டிருந்த கவிதைகளைப் பிரதி எடுத்தல், முன்னர் வெளியிட நினைத்த தொகுப்பிற்கான கவிதைகளை ஞாபகத்திலிருந்து மீட்டுக்கொள்வது என முயற்சிகள் தொடர்ந்தன. எப்படித்தான் முயன்றபோதிலும் சில கவிதை களை ஞாபகத்திலிருந்து மீட்டுக் கொள்ளமுடியாமலே போய்விட்டது. குறிப்பாக இந்திய இராணுவம் அங்கிருந்த காலங்களில் எழுதிய கவிதைகளில் சிலவற்றை மீட்டுக் கொள்ள முடியாமல்போனதுதான் எனது துயரம்.

முற்றிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்குச் செறிந்த சூழலில் வாழ நேர்ந்ததனால் பாரதிதாசனின் பாதிப்பிற்குள்ளாகியே கவிதைகள் எழுத நேர்ந்தது.

இருட்டறையில் உள்ளதடா உலகம் – ஜாதி
இருக்கின்றது என்பானும் இருக்கின்றான்
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றார்

அக்கா அக்கா என்று நீ அழைத்தால்
அக்கா வந்து கொடுப்பதற்கு
சுக்கா மிளகா சுதந்திரம்...

என வரும் பாரதிதாசன் வரிகளை அக்காலத்தில் எனது அறிவிற்குரிய சாட்சிகளாய்க் கொண்டிருந்ததை வேடிக்கை யாய் நினைவு கொள்கிறேன். பாரதியாரின் கவிதைகளுடன் கொண்ட உறவின் பின்னர் பாரதிதாசன் கவிதைகளிலிருந்த மோகம் தேய்ந்துவிட்டது. இன்றுவரையும் அவ்வப்பொழுது பாரதிதாசனின் சில கவிதை வரிகள் ஒலித்துக்கொள்ளும். தேவைகளின் நிமித்தம் அவரை நாடியிருக்கிறேன். மனம் விரும்பிக் கலந்ததெல்லாம் பாரதியாருடன்தான்.



சி.சு.செல்லப்பாவின் *எழுத்து* காலத்தில் பெரும் அலை யாய் வேகம் பெற்ற புதுக்கவிதையின் இன்றுவரையிலான அதன் நீண்ட ஓட்டத்துடன் என்னளவில் தோர்ந்த கவிதை உறவுகளினூடாக, சமீபகாலங்களில் ஒரு வரட்சி நிலையினை அவதானித்துள்ளேன். கவிதைக்கான அதன் மெல்லொலியை யும் ஒத்திசைவையும் மெல்ல மெல்ல நாம் கைவிடும் நிலைக்கு வந்ததன் விளைவா இது? "சவுக்கந்தோப்பில் காற்று வீசி ஓய்ந்த ஒலி" என ந. பிச்சமூர்த்தி குறிப்பிட்டார். இன்று காற்றே வீசவில்லையே, ஓசை எவ்வாறு எழமுடியும்!

இன்றுவரை என் மனம் வசமாகிய கவிதைகளின் எந்தத் தன்மையால் ஈர்க்கப்பட்டுள்ளேன் என்ற கணிப்பில் கவிதை யின் ஒரு பகுதியான கற்களிடையே வழிந்தோடுகையில் நீர் தரும் மெல்லொலி கலந்த அதன் லாவகம்தான் எனப்படு கிறது. அதே வேளை அது மௌன லயத்துடன் உள்ளிழுத்தும் ஓடக்கூடியதே. சிலவேளை தப்பாகவும், ஒரு வரையறைக்குள் ளும் அடக்கிப் புரிந்துகொள்ளப் பழக்கப்பட்ட தமிழ் மனம் இதை ஓசை மேலுண்டான ஈர்ப்பு என்று ஒருமுனை எல்லை வரைக்கும் கொண்டுசெல்லும் வாய்ப்பு உண்டு. அப்படியல்ல என்பதற்காகத் தான் பாரதிதாசன், பாரதியார் பற்றிய என் பதிவுகளைக் குறிப்பிட்டேன். சொற்களில் உயிரும், மொழியின் தெளிவும் லாவகமும், இவற்றுக்கூடான லயமும் கவிதைக்கு முக்கியமென நான் கருதுகிறேன். அறிவுசார்ந்த கருத்துக்கள் கவிதையாகிவிடாது. இன்று கவிதை என்ற பெயரில் அதிகம் நிகழ்வதும் அதுதான். அறிவை உள்வாங்கிய பின்னும் அதற்கு மேலாகக் கவிதைக்கு ஒன்று தேவைப்படு கிறதே, அது என்ன? மஹாகவியின் கவிதை வரிகள் கிறங்க வைக்கின்றனவே, ஏன்? நமது நாட்டார் பாடல்கள் ஏன் மயங்கவைக்கின்றன? இன்றைய கவிதைகளில் படிமங்களின் சுமையும், அதன் இணங்கிப் போகாத தன்மையும் அதிக ரித்துக்கொண்டேபோகின்றன. படிமங்கள் எந்தக் கணங்களு டன் பொருந்திப்போகின்றன என்பதை உணர்தலில் ஏற்படும் ஆயாசம் சலிப்பை ஏற்படுத்துகிறது. படைப்பிலிருந்து பெறும் அனுபவத்தைச் சந்திக்கவிடாது வழிமறித்து, சுற்றுப்பாதை களால் அழைத்துச்சென்று வழி தவறவைக்கும் படிமங்களால் கவிதையின் உயிர் நசிந்துகிடக்கிறது. மரபின் சுமைகளைத் தூக்கி எறிந்து அக்கினிக்குஞ்சாக வெளிவந்த புதுக்கவிதை, படிமங்களின் சுமையினால் தள்ளாடுகிறது. பழைய செய்யுள் களையாவது புலியூர்க் கேசிகனது துணையுடன் புரிந்து கொள்ளலாம். ஆனால் புதுக்கவிதையில் தனித்துவிடப் பட்டுள்ளோம்.

ஒவ்வொருவருக்குமான கவிதை அனுபவங்கள், ஈர்ப்புக் கள், அபிப்பிராயங்கள் பொதுவானவையல்ல. முரண்படுதலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணங்கிப் போவதும்தான் இன்று சாத்திய மாகக்கூடியவை. நான் சரி, நீ பிழை என்பதற்கான சாத்தியமே இல்லை. அவ் வாறான சாத்தியத்திற்காக இன்று அரசியல் களத்தைவிட இலக்கியத்தளத்தில்தான் வெட்டரிவாள் மீசையுடனும் வீச்சுக்கத்தியுடனும் அதிகம்பேர் உள்ளார்கள்.

கோட்பாடுசார்ந்து படைப்புக்களைச் சில வரையறைகளுக் குள் அடைக்கும் இலக்கியப் போக்கோடு என்றுமே என்னால் இணங்கிப்போக முடிந்ததில்லை. எல்லா வரையறைகளையும் மீறி வழிந்தோடக்கூடியதுதான் படைப்பு மனம். படைப்பின் வேர் புறச்சூழலுடனான தொடர்பில் இருக்கையில், புறச் சூழல் சதா மாற்றத்துக்குள்ளாகிக்கொண்டிருக்கையில் மாற்ற முடியாத விதியை எவ்விதம் நம்மோடு கூட்டிச்செல்லமுடியும்.

என் கவிதைகள் எனக்கும் எனக்கு வாய்த்த புறச்சூழலுக்கு மான பதிவுகள்தான். எங்கள் காலம்தான் சகவாழ்விற்கும் போராட்ட வாழ்விற்கும் இடைப்பட்ட காலம். கலப்புக் காலம். வாழ்வு நிலைகளும் போராட்டச் செயற்பாடுகளும் நிலவிய காலம். பொலிஸ்காரரையும் இராணுவத்தினரையும் ஒருங்கே கண்ட காலம். எங்கள் காலத்தில்தான் தேசியம் என்ற சொல்லின் அர்த்தம் வடகிழக்கிற்கான எல்லைகளுடன் எங்களுக்கான தேசியமாக மாறியது. Dr. Jekyllஐ Mr. Hyde ஆக்கிரமித்துக் கொண்டதைப் போல் யுத்தத்தின் கொடூரம் நீக்கமற எங்கள் மண்ணில் நிலைத்தது. ஒரு மனிதன் என்ப தையும்விட எனது மொழி, இனம் சார்ந்து நானும் எனது இனமும் கொண்ட நெருக்கடிகள், புறக்கணிப்புக்கள் அழுத்த மாக என்னுள் பதிந்திருக்கின்றன. அதிக துன்பத்திற்கும் அவலத்திற்கும் ஆளான இனத்தைச் சேர்ந்தவனாகையால் அதன் அரசியல் தன்மை என் கவிதைகளில் அதிகமாகச் செறிந்துள்ளன. காலம் கவிதைக்கு அளிக்கும் சலுகைகளை மீறி இவை கவிதைகளாக இருக்கின்றனவா என்பதுதான் எனக்கு முக்கியமானது.

இதுவரை கலை இலக்கியம் சார்ந்து எனக்குள் நான் வகுத்துக் கொண்டுள்ள விமர்சன அளவுகள் தொடையை யும் மார்பையும் தட்டி மல்லுக்கு நிற்கும்போது என் கவிதை களால் அவை தோற்கடிக்கப்படவேண்டும் என்பதுதான் படைப்புமன எதிர்கால ஆவல்.

கவிதை பற்றியும், அது எடுக்கக்கூடிய சாத்தியங்கள் பற்றியும், அதுசார்ந்த மேலைத்தேய சிந்தனைமுறைகளையும் புரிதல்களையும் எனக்கு உணர்த்திய மதிப்பிற்குரிய நண்பர் மு. பொன்னம்பலத்திடமிருந்து இத்தொகுப்பிற்கான முன்னு ரையைப் பெற்றுக்கொள்ள முடிந்தது மகிழ்ச்சியே.



என் நீண்டகால நண்பரும், செயல்வடிவின் குறியீடுமான பத்மநாப ஐயரின் முயற்சி இன்றேல் இந்நூல் வெளிவந்திருக் குமா என்ற கேள்வியுடன் நிறுத்திக்கொள்கிறேன். அதற்கும் அப்பாலான விபரிப்பை நட்பின் நெருக்கம் தடுக்கிறது.

இத்தொகுப்பிலுள்ள சில கவிதைகளை வெளியிட்ட *வானம்பாடி, அலை, புதுசு, ஈழநாதம், சுபமங்களா*, ஐரோப் பாவின் *நாழிகை, தாகம், மௌனம்* இதழ்களுக்கும், *நியூஹாம் தமிழர் நலன்புரி சங்கத்தின் 1996ஆம் ஆண்டு மலர்*, மற்றும் *உலகத் தமிழ், அப்பால் தமிழ்* ஆகிய இணையத்தளங்களுக்கும் நன்றி.

லண்டன் மு.புஷ்பராஜன்
12.10.2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு காலை

விளித்துக் கொள்கையில்
கிணற்றடியினில்
வாளியின் தாள ஒலிகள்

'விடிஞ்சு போச்சுது'

வேலைக்கு விரைய
வீதியில் இறங்க
வெள்ளி விரித்த வானில்
கிள்ளி எடுத்த நிலவின் கீற்று

மாசிப் பனியிங்கு
மூசிப் பெய்கையிலும்
பேக்கரி முன்னால்
மொட்டாக்குடன்
பாணுக்குத் தவம் கொள்ளும்
நாளைய மன்னர்கள்

முன் மாலையின்
உயிர்ப்பிழந்த கடைகளிடையே
மின்னொளி வீசும்
தேனீர்க் கடையொன்று
மீனவர்க்காய் முழித்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவொளியின்
மம்மல் படர்ந்த வீதிகளில்
தோளில் சுமந்த
மரக்கோலும் வலையுமாய்
கடல்முகம் சிலர்விரைய
கோவில் நோக்கி
அன்னையர் துணையோடு
துப்பட்டி சகிதம்
பின்செல்லும் கன்னியர்

தூக்கம் துறந்து
சந்தி மதகில் இருந்து
சுருட்டுக் குடிக்கும்
போர்வை போர்த்திய முதியோர்

இவற்றினோடு
வெள்ளாப்பின்
அடிவானச் செம்மை நோக்கி
கரைந்து செல்கிறது
காகம் ஒன்று.

**1975**

## யௌவனம்

அவளா...
புன்னகை மின்னலோடும்
பின்தொடரும் தங்கையோடும்
யௌவனமாய்...

எரிந்த விளக்கின்
ஒளியைக் கொல்ல
ஓலைக் குடிசையுள்
நிறைந்த இருளில்
இணைந்த உறவு
உயிர்த்து உயிர்த்து
கரைந்து கரைந்து...

மீண்டும் உயிர்த்த
விளக்கின் ஒளியில்
வெறும் சதையாய்
கொண்ட கோலமா...

புன்னகை மின்னலோடும்
பின்தொடரும் தங்கையோடும்
யௌவனமாய்
முன்னைவிட யௌவனமாய்...

**1975**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதியும் சமாதானமும்

வறுமைத் துயர்கள் நீங்கிட வேண்டும்
அதன் பிறகே அடுத்தவை என்ற
மீட்பின் குரலோடு
அமர்ந்தோர் ஆட்சியில்
வாக்குறுதிகள்
வெற்று வார்த்தைகளாயின.

கால நகர்வில்
மீண்டும் எழுந்தன வறுமையின் ஓச்சம்
அடிவயிற்றில் எழுந்த தீயோ
சிரசில் கொதிக்க
வயிறு தடவிய கைகள்
எங்கும் எழுந்தன.

நீண்டு உயர்ந்த கைகளை
வாள்கொண்டு வீசினர்
வாள் முனையில்
வடிந்த குருதியை வழித்தெறிந்து
குன்றில் ஏறிக் குரலிடுகின்றார்

இந்த நாடே
நீதியும் சமாதானமும்
நிலவும் நாடென...



## நீண்ட பெருமூச்சுக்கள்

இயலாமை
நீண்ட பெருமூச்சுக்களாய்
மருந்துத் துண்டின்மேல்.

'வயிற்றால சத்தி'
பழஞ்சீலையாய் வெளிறிய
குருத்துடல் பாயில்...

அரியும் காற்றில்
அலையும் விளக்கின் ஒளி.

வியாகுலமாதா முன்னே
வழியும் கண்ணீருடன்
வயிறு பசித்திருக்க...

தூரக் கச இருட்டில்
கடலோடு ஒருவன்
கண்விழித்து மாய்கின்றான்.

**1978**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பாவும் அம்மாவும்

எங்கள்
அப்பாவிற்கும் அம்மாவிற்கும்
என்றும் சண்டை...

சுயமாய் வாழத் தொடங்கிய
காலம் சிறிதின் பின்னர்
தொடரும் பகையில்
இருவருடனும் நாங்கள்
இணைந்தும் பிரிந்தும் வாழ்ந்தோம்.

அப்பா தயவில் வாழ்கையில்
அம்மா வருவார்
பிள்ளைகள் வளரும் முறையே பிழையென
கண்ணீர் சொரிந்தார்.

எங்கள் வயல்கள் எங்களதே
விதைப்போம் அறுப்போம்
எங்கள் கடல் எங்களதே
அனைத்து வளமும் நமதேயென்றார்
அம்மாவுடனே நாங்கள்.

அப்பா வருவார்
விரிந்த வானின் கீழேயிருந்து
விருந்து கொள்வோம்
அயல்நாட்டு அனைத்து உணவும்
உண்போம் என்றார்
அப்பாவுடனே நாங்கள்.

இனியென்ன
அம்மா வரவைப் பார்த்து இருப்போம்
அதன் பிறகு
அப்பா வரவையும்தான்.

**1978**

## வாடைக் காற்றே

வாடைக் காற்றே!
நீ வருக.

வரட்சிகள் நிலவ
சுற்றிச் சுழன் றடித்த
சோழகத்தின் பின்னே வரும்
வாடைக் காற்றே
நீ வருக.

மணவறைப் பெண்போல்
நாணமுற்ற உன்னசைவில்
நாம் மகிழ்ந்து போகின்றோம்.

ஓங்கார வெறியோடு
எழுந்து வரும் பேரலைக்கு
கரை யொதுங்கிப் போன
எம்சிறு வள்ளங்கள்
இனி மகிழ்ந்து அலைமோதும்.

சோழகத்தின் பெருவீச்சில்
சுகமுண்ட பெருந்தொழில்கள்
வல்லமையை வடித்துவிடும்
வாடையே எம் வசந்தமே
வா...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிநாங்கள் சிலிர்த்தெழுவோம்
கொல்லையில் போட்டிருந்த
குறுங்கண் வலையெடுப்போம்
மண்ணிட்டிருந்த எம்
சின்னஞ்சிறு வள்ளங்களை
கடல்நோக்கி இழுத்திடுவோம்.

பேரலைகள் பெருங்காற்று
வீசிடாத நீள்கடலில்
நாமும் மகிழ்வுடன்
நம் தொழிலை ஆற்றிடுவோம்.

**1978**



## கரைவும் விரிவும்

கோடை சற்று விலகிநின்று
கையை அசைத்த அந்த மாலை
வேலை செய்த களைப்பு நீங்க
வீட்டில்
குளித்துவிட்டுக் குந்தியிருந்தேன்.

வானிலோ
வாரிப் படர்ந்த வெண்மேகத் திடையினில்
வைரப் பொடி சூழ
வட்ட நிலவு.

பூமியின் புழுதி மேனியெங்கும்
பொட்டுப் பொட்டாய்
நிலவீந்த நிழல் மரங்கள்.

யோக நிலையில் செறிந்த ஒளியிடை
வாசலில் நின்ற வாழை மரங்கள்
சோகமாய்த் தலையைத் தூங்கி யசைக்க
அதற்குமப்பால்
வாதராணியோ
வெடித்த சிரிப்பொடு சிலிர்த்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எழிலின் இயற்கை நடுவே
இடைக்கிடை
இலைகள் சரசரக்க எழுந்த காற்று
குளித்துவிட்டுக் குந்தியிருந்த
என்னைத் தொட்டு
இதமாய்ச் செல்ல
என்னுள் நானே
மெல்ல மெல்லக் கரைதல் கண்டேன்.

மெல்ல மெல்லக் கரைந்து நிற்க
சொல்லில் விரியாச் சுகம்
சூழலெங்கும்
சூழ்ந்திருந்த கவிதைச் சுகமெலாம்
எந்தன் சிரசுள் இதமாய் இறங்க
நானே
கவிதையாய்ச் செறிந்து பரந்தேன்.

**1978**

## வயிறுகள்

அந்தியின்
மங்கல் அடிவானம்
கருமை ததும்பும் கடல்
களங்கட்டி வலைக்குள்
வயிறுகள் எத்தனையோ...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 81 மே 31 இரவு

ராணி
இன்னும் வரவில்லை யென்று
அச்சம் சூழ
வாசலைப் பார்த்தபடி
எனக்காகக் காத்திருப்பாய்.

ஆதரவிற்கு
உன்னருகில் யாருண்டு
வீட்டினுள்ளே
சின்னஞ் சிறுசுகள்
மூலைக் கொன்றாய்
விழுந்து படுத்திருக்கும்.

வெறிச்சோடிய வீதியில்
நாய்கள் குரைக்க
விரைந்தோடிய ஒருவனால்
செய்திகள் பரவ
இன்னும் கலங்குவாய்.

தொலைவில்
உறுமும் ஜீப்பின் ஒலியில்
விளக்கை அணைத்து
இருளில் நின்றிருப்பாய்.

உயிரைக் கையில் பிடித்தபடி
குண்டாந் தடிக்கும்
துப்பாக்கி வெடிக்கும்
தப்பியோடிய மக்களில் ஒருவனாய்
என்னை நினைத்திருப்பாய்.

நானோ
நம்பிக்கையின்
கடைசித் துளியும் வடிந்து
மரணத் தருகே.

சூழவும்
உடைபடும் கடைகளின் ஒலியும்
வெறிக் கூச்சலும்
வேற்று மொழியும்
விண்ணுயர்ந்த தீச் சுவாலையும்.

**1981**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கானல் வரி

அலைகடலில்
ஆதவன் மறைவு
இருளின் ஆட்சி

இனிநாம் பிரிந்து செல்வோம்.

கடந்துபோன காலங்களில்
மாவலியின் கரையெல்லாம்
கைகோர்த்து உன்னோடு
நடந்துவர நானிருந்தேன்.

போதிமாதவ மலர்கள் சூடி
முட்களை அங்கேன் மறைத்தாய்
எத்தனை கீறல்கள்
இரத்தக் கசிவுகள்
இத்தனைக்கும் மேலாய்
இதயமில்லா ஈனச் செயலை
மும்முறை செய்தாய்
இன்னமும் தொடர்வாய்.

சத்தியம்தான் பேசுகின்றாய்
சட்டம் நீதி பாதுகாப்பு
அத்தனையும் உன்னருகில்
உன்மத்த னானாய்.

உன்னில் விளைந்த தவறிற்கு
காரணத்தை யேன்
என்னில் கண்டாய்
மண்ணிலெனை
மனித னென
மதிக்கா வுன் வாழ்வின் குறி
என்னை வதைப்பதே

இருளினூடு
இணைந்து நாம் நடந்த போது
சிந்திய வார்த்தைப் பசப்பலில்
பட்ட துயரினிப் போதும்.

இனிநாம் பிரிந்து செல்வோம்.

எனது பிரிவோ
கணு ஒடிந்த மலராய்
உதிரவல்ல,
தாயகத்தில்
உழுது புரட்டும் செம்மண்ணில்
மகிமையாய் மலரவே

**1981**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடரும் நிலைகள்

வளைந்து சிதைந்த வரலாற்றுப் போக்கில்
எல்லாம் இழந்து
இறுதிக் கோட்டில் எடுத்த முடிவும்
பொய்யாய்ப் பழங்கதையாய்
கனவாய் மெல்ல...

பாதையை அறியாத
பயணத்தின் முடிவு
வாய்மையைப் புதைத்த
வர்க்க இணைவு.

இனியும்
காலி முகத்து மாதின்
காதல் கிறுக்கில்
புதிய புதிய முகமூடிகளுடன்
பொம்ம லாட்டங்கள் தொடரும்.

தொடரும் நிலையோ
எங்கும் இல்லை.
தொடரும் நிலைகள்
முற்றும் நாள்வரும்.

**1981**



## கொடியும் கொம்பும்

நீண்ட இடைவெளிகளின் பின்னர்
சந்தித்த போது
முகமறியாதவள் போல்
கடந்து சென்றாய்.

கையில் குழந்தை
இடைவெளிகளில் கணவன்
கொடியும்
கொடிபடரும் கொம்பும்

கல்லானாலும் புல்லானாலும்
சமூகம் திணித்த
ஒழுக்கக் காற்றில்
நீயோர்
அலையும் பஞ்சு

இவற்றினிடையே
நூல்நிலைய வேப்ப மரமும்
நீண்ட தூர
பஸ் பயணங்களும்
உயிர்ப்புற

உன்மன அலையில்
என்கலம் ஆடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலஸ்தீனமும் எனது மண்ணும்- 1

அக்கிரமங்கள்
அக்கினியாய் சூழ்ந்த போதிலும்
பலஸ்தீனமே
அஞ்சாதே

உனது மண்ணின் ஒவ்வோர் அசைவும்
எனது பயணத்தின் பாதையே
எவ்வாறு நான்
ஆக்கப்பட விருக்கிறேனோ
அவ்வாறாகிப் போனவன் நீ

உனது பொய்கைக் கரைகளின் ஓரம்
சுதந்திரச் சிலையின்
ஏந்திய தீபச் சுடரின் ஒளியில்
'சல்பீனிய' விதைகள்
எனது கரைகளில்
துப்பாக்கி முனையில்

நாம் பிறந்த மண்ணின் மீட்பிற்கு
மரணமே விலையானால்
வாழ்வின் ஆரம்பம்
எமக்கு அதுவே.

இருண்ட மேகத்தினால் ஒளியிழந்த
பலஸ்தீனமே
உன் மண்ணில் ஓர்நாள்
விண்மீன்கள் தாளமிட
முழுநிலவின்
கதிர்கள் கோலமிடும்

ஒளி சிந்தும் அந்தப்
பூரண நிலவு
எனது மண்ணிலும்

**1982**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகலிப்பு

இரவே
இதயம் படிந்த தடைகள் துடைக்க
ஏக்கமாக
நானிங்கு

ஒளியிலோ அமைதியின் சிதைவு
இரைச்சல்கள் வேகங்கள்
இதயத்தின் கீற்றொளி உயிர்ப்பை
அணைக்க முயலும்

மென்கருந் துகிலை
எங்கும் வளரவிடு
இரைச்சல்கள் வேகங்கள்
எல்லாம் மடிய
இரவின் சங்கீதம்
உலகை நிறைக்கட்டும்.

விண்மீன்கள் கண்ணசைவில்
நிலவின் பாலொளிப் படர்வில்
காற்றின் மென்தழுவல் உயிர்ப்பில்
என் கீற்றொளிச் சுடர்
அலைப்புறாமல்
அகலித் தெழும்



## புரிதல்

இன்னமும் நானுனக்கு
புரியாத புதிரா?

அதிக மௌனத்திலும்
உறவுகள் விலகி
உள்ளொடுங்கிப் போவதிலும்
வழிதவறிப் போனவனாய்
விசனமேன் கொள்ளுகின்றாய்.

நிலவொளியில்
வெண்மணலில் கோலமிடும்
மரநிழலை
மோகித்ததுண்டா?

அடை மழையின் பின்னுலவும்
ஈரம் விலகா மென்குளிரோடு
வெள்ளி உருகலாய் விரிவு கொள்ளும்
சூரியக் கதிரொளியில்
வியந்ததுண்டா...

கண்கொள்ளும் தூரம்வரை
அதோ
இணையாது நீண்டு செல்லும்
இரயில் பாதையில் படிந்துள்ள
துயரின் மெல்லொலியை
கேட்பதுண்டா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிடையில்
சூடிக் களிக்கவோ
பார்த்து மகிழவோ
எவருமின்றி
பூத்துப் பின் உதிர்வு கொள்ளும்
மலர்களின் சோகத்தில்
கசிந்ததுண்டா...

இயற்கையின் உணர்வுகளுக்காய்
இதயத்தைத் திறந்துவிடு
மௌனமான அதன் மொழிகள்
உன்னில் புரிகையில்
என்னருகில்
நீ வரல்கூடுமே...



## இக்கணத்தில் வாழ்ந்துவிடு

யசோதரா
இக் கணத்தில் வாழ்ந்துவிடு

முற்றத்தில்
விரித்த பாயில் மனைவி அருகிருக்க
மல்லாந்து படுத்தபடி
என்ன நினைக்கின்றாய்?

விண்ணில் வெள்ளிகள் மினுங்க
கள்ளப் பார்வையும் செல்லச் சிரிப்பும்
அருகில் ஒலிக்க
ஆயிரம் எண்ணங்கள்
வீதி மருங்கில் பூத்துப் பொலிகிறதா?

வாழ்ந்துவிடு வாழ்ந்துவிடு
கற்பனையிலாவது வாழ்ந்துவிடு.

'மரணம்
கள்வனைப்போல் வரும்'
அதுவும் உங்களுக்கு
துப்பாக்கி யாலும்
சித்திர வதையாலும்
தீர்மானிக்கப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனம்!
நள்ளிரவில்
சப்பாத்தின் ஒலிகளினால்
உனது வீட்டின்
விளக்கின் ஒளி நடுங்கும்

இழுத்துச் செல்லப் படுவாய்
பிள்ளைகள் கதற
மனைவி திகிலில் உறைய
இழுத்துச் செல்லப் படுவாய்
அக் கணத்தில்
துப்பாக்கி ஏந்திய ஒருவன் தீர்மானித்தால்
மனைவியும்
இழுத்துச் செல்லப் படுவாள்.

இப்படித்தான்
ஒரு பகற் பொழுதில்
உனது நண்பனும் மனைவியும்
இழுத்துச் செல்லப் பட்டார்கள்.

பிறகென்ன
சித்திர வதைக் கூடங்கள்
காத்துக் கிடக்கின்றதே

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட
ஒப்புதல் பத்திரத்தில்
கையொப்பம் இட்டே
ஆக வேண்டும்

இல்லை யென்றால்
'எஸ்லோன்' பைப்பும்
தலைகீழாய்த் தொங்க
சாக்கின் வழியாய் மிளகாய்ப் புகையும்
மலவாசல் நுழையும்
இரும்புக் கம்பியும்
யாருக்காக...

இவையெல்லாம்
இயல்பாய் நீங்கள் அளித்த
வாக்குமூலங்களாய்
முனை முறிந்த தராசில்
நிறுக்கப் பட்டு
தீர்மானித்த இலக்கு நோக்கி
நகர்த்தப் படுவீர்

எனவே யசோதரா
நீ
இக்கணத்தில் வாழ்ந்துவிடு.

**1983**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீனிக்ஸ்

எவ்வகையிலும்
நீ முயன்ற போதிலும்
அழிவென்பதோ
எனக்கு இல்லை.

வல்லமை கொண்ட
என்குரல் தன்னை
ஏந்திடும் காற்றே
நீள்கட லோடி
நெடுமலை தாவி
பாருல கெங்கும்
பறையாய் முழங்குக.

அன்னை மடியில் தவழ்ந்த போது
சிறுவிழி காட்டிச் சின்ன வாயால்
அம்மாவென்று அழைத்ததாலோ
நித்தம் நித்தம்
முள்முடி சூட்டியும் ஆணிகள் அடித்தும்
சிலுவையில் அறைகிறாய்.

ஆணிகள் அடித்த சிலுவை தன்னிலும்
கவிழ்ந்து போகுமோ
என்சிரம் என்றும்

என்முகம் சிதைத்து
என்குலம் அழிக்க
எரியும் நெருப்பாய் சூழும் போதெலாம்
புத்தொளி கொண்டு
பீனிக்ஸ் பறவையாய்
மீண்டும் மீண்டும் வானில் பறப்பேன்.

**1984**

இச்சிறு செடியினைக் கிள்ளி
எங்கும் நடலா மென்ற
எதிர்பார்ப்பின் விரல்களில்
கிளைகள் நடுவில் முளைத்த
முட்கள் கீறின.

பிறகென்ன
மேலாதிக்க ஆணவம்
மேலெழ
தர்மச் சக்கரம்
தலைகீழாய்ச் சுழன்றது.

காந்தியின் தடியுடன்
“அன்பு வழியாய்”
“பூமாலையாய்”
போர்வையோடு நடுவராய் வந்தோர்
“கோல்” போட்டனர்.

**1987**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெல்பவர் பக்கம்

கண்களையும் காதுகளையும்
மூடிக் கொள்ளும்
ஜாலம் பயில்வோம்

எது நடந்தாலென்ன
உள்ளுணர்வில் சுரண்டுமே
மனச் சாட்சி ஒன்று
புறமொதுக்குவோம்
விளைவுகள் நம்கையில்
இல்லை யென்றே
அமைதி கொள்வோம்

எவரெது சொன்னாலும்
இவையெமக்கு
அனுகூலங்களையும்
நீண்ட ஆயுளையும்
அளிக்கும் அல்லவா...

எனவே
வெல்பவர் பக்கம்
என்றும் நாம்.

**1987**

## கைவிடப்பட்டோர்

அவர்கள் தங்களுக்கு
வாக்களிக்கப்பட்ட பூமிக்காய் ஏங்கினர்.
தொடர்ந்து வந்த
அவமானங்களிலும்
இழிவுகளிலும் இருந்து மீள
'மெசியா'வுக்காய் காத்திருந்தனர்.

வானிலிருந்து
'மன்னா' பொழிந்த போதும்
தூதர்கள் இறங்கிய போதும்
அகம் மகிழ்ந்து வாழ்த்தினர்.

ஆயினும் அவர்கள் மகிழ்வு
நீடிக்கவே யில்லை.

'வாளேந்திய சிங்கமும்
தூணேந்திய சிங்கங்களும்'
இணைந்தபோது
கைவிடப் பட்டோர் ஆகி
சிதறடிக்கப் பட்டனர்.

மீண்டும் தாய்மார்
இழுத்துச் செல்லப்படும் புதல்வர்களுக்காய்
அந்நிய ஜீப்புகளின் பின்னால்
தலைவிரி கோலமாய்
கதறத் தொடங்கினர்.

**1988**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதிர்வு

பொன் ஒளிர் காலையில்
கண் மலர்ந்து
மௌனத்தில் கவிதை சொல்லும்
வண்ண மலர்கள்
அந்தி மென் இருளில்
வனப்பு இழந்து
வாடிப் பின் உதிர்கையில்
துயரம் என்னுள் கசியும்.

ஒருநாள் பொழுதிலா
இவ்வெழில் வாழ்வென
ஏக்கம் என்னுள் வழியும்.

இவையெலாம் இன்று
அற்பமாய்ப் போயின.

வேண்டாப் பொருளாய்
வள்ளத் தளத்தில் வீசியடித்த
கடுக்கா நண்டுகளாய்
வானின்று வீழ்ந்த பகையில்
உடல் சிதறிப் போகும்
உயிர்கள் முன்னால்...

சிதைவுறாத
மலர்களின் உதிர்வு
மகத்துவம் அன்றோ...

**1990**

## பெயர்வு

மண்ணின் ஈர்ப்பை உதைத்து
விண்ணில் விரைகிறது விமானம்.
மேகமண்டலங்கள் திறந்த
புதிய பயணம்.

யன்னலின் கீழாய்
ஆழத்தில் வழிகிறது
மின்குமிழ்களின் ஒளியாறு
சிறிது நேரத்தில்
அதுவும் மறைந்துவிடும்
நான் விட்டுவிட்டு வந்த
கடலோரக் கிராமம் போல்

முன்னே பெயர்ந்தோர்
முகவரி இழந்து
பனி உறைந்த
மலைச் சிகரங்களிடையே
விறைத்துப் புதைந்தும்
சிவப்பு விளக்காய்
முன்தெரிந்த போதிலும்
இடிபாடுகளிடையே ஒளிர்ந்த
ஈரவிழிகள் இரண்டும்
கூட நின்ற
பிஞ்சு விழிகளும்.

எவர் விதி எங்கென எவரறிவர்?
என் ஜென்ம பூமியின் நினைவுகளுடன்
ஏதிலியாய் இறக்க நேரின்
சீவியத்தில் நேசித்தவர்கள்
மரணத்தில் மறவாதிருக்க
ஒரு மெழுகுதிரியை ஏற்றுவார்களா?

விலகிப்போன வெள்ளாட்டை
அது நினைவூட்டும்.

**1991**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவைப்பு

வேரொடு பிடுங்கி
வளம்கொள் பூமியில்
பதிவைத்த வாழ்வோ
வேர்கொள்ள வில்லை.

மூடுண்ட அறையும்
அயலறியா வாழ்வும்
நினைவுகளாய்
வெந்து சிவந்த எனது மண்ணின்
அழிவுகளின் குவியலும்
சிதறிப்போன
உறவுகளும் உடல்களும்.

முன் விரிந்த
முடிவறியாப் பாதையில்
நினைவுகளும் பெருமூச்சுக்களும்
சுமையாய்க் கொண்ட
தனித்த பயணம்.

ஆசைகளும் வாழ்வும்
வேறு வேறாக
தவறாய் நடப்பட்ட
வாழ்வின் விதிப்பில்
தொடரும் இருப்பு.

**1992**



## அம்மாவின் மரணம்

உறவின் நாருரிந்த
புலம் பெயர் வாழ்வில்
அத்துயர் எனை அடைகையில்
அம்மா புதைந்து வாரங்களாயின.

அம்மா...

சூழ நின்ற கன்றுகளுக்காய்
ஊனை உருக்கி
நித்தம் துயர் சுமந்த
வாழை.
உயிர் பிரிகையிலும்
சூழ்ந்திருந்த மக்களிடை
இல்லாத மகனை எண்ணி
தவித்திருந்த மனம்.

ஒப்பாரிக் குரலோடு
ஊர்சுமந்து செல்கையில்
பின்செல்லாது
சபிக்கப்பட்டவன் கண்முன்
சிலுவை முன்னிருந்து
நொந்தழுத முகம்

உலர்ந்த தண்டில்
பசுமையூறிப் பூக்கையிலே
பூவை முகராது
உயிர் பிரிந்து போனாலும்
என்றுமே எமக்கு
வாய்க்காத வரமொன்று
வாய்த்தது.

அப்பாவின் கல்லறையுள்
அம்மாவைப் புதைத்தனராம்.

**1992**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூடும் குரலும்

தன் குரலுக்காய்
இரத்தம் வழியக் குதறப்பட்டு
வீதியில் விழுந்து துடிக்கிறது
கூடில்லா குயிற்குஞ்சு.

**1992**

## குளிர்கால மரம்

அவல வாழ்வின் துயர்கள் அழிய
சுடராய் மேற்கில் சிவந்தவை
கண்ணெதிரில்
அவிந்து போயின.

நம்பிக்கை வேர்கள் கருக
அந்தகாரமே எங்கும்.

சொரிமணலில் புதைந்த வண்டு
மணலரித்து வெளிவரலாய்
சிறுவயதில்
அன்னை காட்டிய திசைபுலர
கோவில் மணியோசை

மீண்டுமோர் சுற்று
அனுபவச் சுமையுடன்.

முன்னர் குவிந்த
நம்பிக்கை யீனங்கள்
இன்னமும் அங்கு இறுகியே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமை கொண்ட எங்கும்
இருள் மிக வலுக் கொண்டால்
எவ் வழியினில்
ஒளி புலரல் கூடும்?

இலைகளை இழந்தும்
ஜீவனைக் குவித்து
வசந்த காலத்திற்காய்
தவமாகும்
குளிர்கால மரமாய்
ஆதலே இருப்பாய்...

**1993**

## யன்னல்

இன்னும் எத்தனை நாட்கள்
யன்னல் ஓரமும்
வீதியில் தேடிடும் விழிகளும்

புகார் மூட்டத்துள்
பொலிவிழந்த குளிர்கால மரங்கள்
விரைவு கொள்ளும்
மனிதர்களும் வாகனங்களும்

இருப்பின் வெறுப்பில்
மாற்றமுற
மண்ணின் மணத்தில்
தவிக்கும் மனம்

எத்தனை மாதங்கள்
இன்னமும் கடிதமில

**1993**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவுகளுக்கு வாழ்த்துக்கள்

கனவுகளுக்கு
வாழ்த்துக்கள்

உறவுகள் தொலைவு கொண்டு
பல்வேறு புவிப்பரப்பில் அசைவு கொள
வண்டல் மனத்தில்
ஸ்தூலமாய் உறவுகள்
கனவினில் துலங்கும்

ஒரு வசந்தகால வனப்பாய்
மகிழ்வும் நிறைவுமாய்
புலரும் அக்காலைகள்

இந்த மகிழ்வை
இங்கெவர் எமக்கு அளித்தல் கூடும்?

கனவுகளே மலர்க
உறவினில் வளர்க

**1993**

## ஒரு ஞாயிறு மாலை

ஒரு ஞாயிறு மாலை
யன்னல் அருகிருந்து
அப்பிள் மரத்தில்
அணில் கோதும் அழகில்
லயித்து இருந்தேன்.

சின்ன உடலில்
என்ன வேகம்!
சிலிர்ப்பும்
வாலின் விசுக்கலும்
விடுவிடு வென
அங்கு மிங்கும் நோக்கலும்
செயலில் முனைப்பும்

ஒருசில கொறிப்பின் பின்
பயனற்ற உதிர்வில்
எத்தனை பிஞ்சுகளோ?
லயிப்பில்
இழப்பின் நெருடலும்.

தொலைவில் அப்போது
அந்தச் சத்தம்.
முதலில் மெல்ல
பின்சற்றுப் பலமாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்!
'ஹெலி'யேதான்.

"ராணி!
பிள்ளைகளைக் கொண்டு
'பங்கரு'க்குள் ஓடு"

ஒரு கணச் சுதாரிப்பில்
இருப்பின் தெளிவில்
நிம்மதிப் பெருமூச்சு.

சே!
எத்தனை ஆயிரம் மைல்கள் தாண்டி
எங்கிருந்தாலென்ன
பிரக்ஞை யற்ற கணங்களில்
அந்தச் சத்தம்
என்னமாய் மனதை
உலுக்கி எடுக்கிறது.

அணிலின் அழகும்
லயிப்பும்
எங்குபோய் ஒளிந்தன?

**1993**



# இழப்பு

இழப்பின் துயரில்
மனம் அலைவுற
தூக்கமோ தொலைவில்

வெறித்த விழித் திரையுள்
ரி.வி.யில் தோன்றிய
ஓட்டப் பந்தய வீரர்கள்.

வேகம் கொண்டு விரையும்
கால்களின்
விசையின் வேர்
மண்ணின் மகிமையிலா?

ஆரவார அலைகளிடையே
வெற்றி வீரர்
தம்தேசக் கொடியோடு
வலம் வருவர்

பதக்கமும் பூங்கொத்தும்
தேசிய கீதத்துடன்
மெல்ல எழும் தேசக் கொடிகள்

கண்கள் மல்க
விறைத்து நின்று
பெருமிதம் கொள்வர்

இம் மகத்துவ இழப்பின்
வெறுமை உறுத்த
ஏக்கம் குதிர
மனமோ அலைவில்

**1993**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனுக்கு

நண்ப
சுதந்திரத்திற்கான
இருப்பு உனதென்றாய்
நன்று
சுதந்திரம் இனிது
நிறைவும் தருவது

உனக்கு ஒவ்வாதோருடன்
நட்புநான் கொள்கையில்
உன்னுள் நிகழ்வது என்ன?

ரோஜாவில் ஆசை கொள்ளை
முட்களில் அல்லவென்றால்
ரோஜாவை முட்களுடன்
ஏற்றிடச் சொல்கின்றாய்

அமைதியான கடலின்
மெல்லலையில் படரும்
நிலவின் கவிரில்
மலர்வேன் என்றால்
கடலோடு புயலையும்
ரசித்துக் கொள் என்கிறாய்

புயல் தவிர்ந்த கடலும்
முள்நீங்கிய மலருமே
மனதிற்குத் தேவை

இப்போதெல்லாம்
குலுக்குமுன் கரத்தில்
வன்மம் புரிகிறது
எதிர்முனை ஒன்றில்
பொருத்திப் பார்க்கிறாய்

நண்ப
அவரவர் கருத்துடன்
புரிதலுடன்
வாழப் பழகுதலே
இனிதும் நிறைவும்.

**1995**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணும் மனமும்

மண்ணுக்கும் எமக்கும்
உறவில்லை என்றா சொன்னாய்?

வாழ்ந்த இடமும் வளமும்
சிதறிய தீயில் அழிய
சூழ்ந்திருந்த உறவுகள் துறந்து
நொந்தலையப் பிறந்தவர்தான்.

நிலமோடிய வேர்கள்
வீசிய புயலில் அறுபட
நீரோடு அள்ளுண்டு
நெடுந் தொலைவுக் கரைகளில்
வந்து ஒதுங்கிய பாசிகள்தான்.

ஆயினும் எம் நித்திரையில்
நண்பர் கதைகளில்
விட்டுவந்த தடங்கள்
மின்னலாய் வெடித்து
மத்தாப்பாய்ச் சொரிவதை
யார் அறிவர்?

பூவரசங் கம்புகளில்
வந்தமரும் தும்பிகளும்
முள்முருக்கம் பூவின்
செவ்விதழ் கோதவரும்
மஞ்சள்வாய் மைனாவும்
வேலிகளின் மேலே
தோகையாய் பூத்திருக்கும்
வாகைமலர் வனப்பும்...



பண்ணைப் பாலத்தில்
காலடியின் கீழ்
கல்லில் அலையுரசும்
கடலின் கானமும்
தழுவிய காற்றிற்கு
முகம் நீட்டித்
தலைகலைந்த மாலைகளும்

பனைகளின் கீழிருந்து
கள்குடித்த மகிழ்வும்
மணிக்கூண்டுக் கோபுர உச்சியில்
நிலவெழுந்த பௌர்ணமியில்
கோட்டை மூலையிலிருந்து
வில்வன் பாடிய பாடல்களும்

ஒரு காலை நேரப்
புல்லாங்குழல் ஓசையாய்
மனதை வருடும்
மனைவி நினைவுகளும்
மார்பில் தூங்கிய
மழலைச் செல்வங்களும்

இன்னும் இவையாய்
சிறுகச் சிறுகச் சேர்த்த
எம்மனக் காவில்
குதிரையோடு வருவதற்கு
குத்தகை தந்தது யார்?

மண்ணுக்கும்
மன உறவுக்குமான வேர்
ஆத்மார்த்தமானது
அதிகாரத்தால்
அறுவதில்லை அறிக.

**1995**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைனா விடு தூது

இலைகளை இழந்த
கிளைகளின் நடுவே
சிறகுகள் கோதும்
மைனாவே மைனாவே
பனியுறை நாட்டில்
உறவுகள் நினைந்து
தனிமையில் குமையும்
எனக்காய் நீயோர்
தூது செல்லாயோ?

பறந்து செல்கையில்
நீதித் தேவதையின்
விழிவழிந்து வீழ்ந்த
கண்ணீர்த் துளியாய்
நிலம் அமைந்தால்
தாழப் பதிந்து
வடபுலம் செல்வாய்.

வாழ்புல மெல்லாம்
அனல் சூழ்ந்து கருக
பெருமழை நனைக்க
மனம் சுமந்த துயரோடு
பெயர்ந்து போனோர்கள்
அங்கிருப்பர்.

மரங்களின் கீழே
ஒழுகும் துளிகளுக்கு
ஓலை ஒதுக்குமின்றி
சிதறி யிருப்போருள்
மனைவியையும் மக்களையும்
தேடுவாயா...

அவர்களுக்கான
வீடு இழந்ததனால்
நாடிழந்தவன் நான்
இன்றவர்கள்
ஊரும் இழந்து
வாழ்ந்த மண்ணின்
வேரும் இழந்தனர்.

அங்கவர் இலையெனில்
வந்தோரிடம்
விசாரித்துக் கொள்.

கால்கடுக்க நின்று
நெரிந்து வருகையில்
வழிதவறிப் போனவரும்
சேற்றிலும் கடலிலும்
புதைந்தும் மூழ்கியும்
இறந்தோர் பலரென
காற்று வாக்கில்
கதைகள் பலவுண்டு.

விசாரித்துக் கொள்
இப்போதெல்லாம்
இறந்தவர் பற்றியும்
தொலைந்தவர் பற்றியும்
விசாரிப்பவர்களே
எங்கும் அதிகம்.

மைனாவே மைனாவே
மனம் தளராது
விசாரித்துக் கொள்
வெந்தணல் நெஞ்சோடு
வாழும் எனக்காய்
எங்கவர் சேதியோடு
வந்து சேராயோ?

**1996**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமை

‘உன்னால்தான்
எனது தனிமை உன்னால்தான்
ஆயினும் இருக்கிறேன்’
என்கிறாய்.

குண்டு வீச்சில்
சிதறிய வீட்டில்
முத்தங்களுடன் பிரிந்தோம்
பனித்தன உன் விழிகள்

நேசித்த மண்ணையும்
உன்னையும் விட்டு
விதிக்கப்பட்ட இருப்பில்
பனித்த விழிகளே
இன்றும் என்னுடன்.

பனிமூடிய கூரையில்
குந்திய ஒற்றைக் குருவியாய்
வரண்ட குளத்தின்
ஒற்றை மலராய்
வாழ்வின் நீட்சி

தனிமைதான்
யாருக்கு யாரால்?

**1996**



# வல்லூறும் வெண்புறாவும்

என்றும் வல்லூறுகளின்
நிழல் விழுந்த
எம் முற்றத்து வேலியில்
இம்முறை
வெண்புறா வந்து அமர்ந்ததாய்
சொன்னார்கள்.

வெண்புறா...!
அதுவும்
தாய் மனம் வாய்த்த
பெண்புறா வென்பதால்
இழப்பின் துயரறியும்
கூடவே
வெள்ளரசங் கிளையில்
வாசம் அமைந்ததாய்
சொன்னார்கள்.

கூர்நகத்தால் எங்கள்
குஞ்சுகளை விறாஞ்சி
கொத்திக் குதறி
வீதிகளில் வீசிய
விதிதான் நாமறிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம் இதுவென
நாலுமறிந்தோர் கூறியும்
நம்பலாம் என்றனர்
பெரியோர் சிலர்
வழியேதும் இல்லாது
மறுத்தவர் பின்னர்
வழிமொழிந்தனர்

II

கோழிகளும் குஞ்சுகளும்
கூட்டைத் துறந்து
வீதி சென்று காலாறி நடந்து
வீடு திரும்புகையில்
பொல்லாப் பெதுவும்
பொருந்தி வரவில்லை

பொல்லா இடுக்கண்
போயின வென்று
பூரித்திருந்த
காலம் அதிகம் கழியுமுன்
இடைக்கிடை
காரிருள் கழிந்து பார்க்கையில்
ஓரிரு குஞ்சுகள்
குறைந்து வந்தன

மேய்ந்து வருகையிலே
இருளில் எங்கோ
கால்தவறிக் கானில்
விழுந்ததோ வென்று
தேடியும் அகப்படாது
அயர்வு கொண்டோம்

III

வெள்ளரச மரத்தின்
வீதி தாண்டி வந்தோர்
காவிவந்த கதைகள்
காற்றில் கசிந்தன

மக்கிய எலும்புகள்
மரத்தடியில் கிடப்பதாய்
வெண்புறாவின்
மேனியில் இடைக்கிடை
இரத்தத் துளிகள்
தெறித்து இருப்பதாய்
வெண்மை நிறம்
மங்கி இருப்பதாய்...

ஏதும் புரியாது
தவித்து இருக்கையில்
குஞ்சுகள் தொடர்ந்தும்
குறைந்தே வந்தன

அடிமடியில் நாம்
நெருப்பைக் கட்டி
அலைந்த வேளை
பெருமழை ஒன்றால்
வெண்புறாவின்
சாயம் இழந்து வழிய
வல்லூறின்
உருவம் புலர்ந்தது

மீண்டும் நாமெம்
முன்னோர் போலவே
ஏமாந்து போனோம்

IV

ஏமாற்றம் என்பது
எமக்கு விதியா?

**1997**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் இப்போது
இடம் மாறிப் போயின
சொற்களும் அவ்வாறு
பொருள்மாறிப் போயின

வல்லிருள் இப்போது
கவின் நிலவின்
கதிர் ஆயின
வல்லூறு இப்போது
வெண்புறாவின் வனப்பு ஆயின

சுதந்திர தாகம்
பயங்கர வாதமாம்
ஆக்கிர மித்தலே
விடுவிப் பானதாம்

குண்டுகள் வீசிக்
குடிமனை அழித்தல்
சமாதானச்
சங்கதிகள் ஆயின
அமைதிக் காகவே
யுத்தமென்றாயின

பேய்கள் இருந்து
கூழ் குடித்து
மகிழும் பூமி
புதிய பூமியாய் ஆயின

**1997**

## வசதியாக

இப்போது எங்குள்ளேன்
என்பதி லிருந்துதான்
வசதியாகத்
தொடங்குகின்றாய்

ஒரு பிள்ளைப் பூச்சியில்
முட்கள் முளைத்த
காலக் கணக்கை
கவனமாய் மறைத்தாயோ?

முட்கள் பற்றிப்
பேசுதல் ஆயின்
காலக் கணக்கையும்
பேசுதலே முறை

அங்குதானுன்
வன்செயல் சாட்சியாய்
முளைத்த முட்களின்
வேரினைக் காண்பாய்

வழிகள் யாவையும் மூடி
பிள்ளைப் பூச்சி நடை பயில
நீ திறந்த பாதையே
அதுதான்

முள்ளினை தவிர்க்க வேண்டில்
உன்
முறையினை மாற்றுதல் வேண்டும்

**1997**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணாடி

இப்போதெல்லாம்
கண்ணாடி மீதினில்
கோபமாய் வருகிறது

எனக்கு நானே
வகுத்துச் சேர்த்த செம்மை உருவை
இரக்கமற்று
உடைத்துக் கொள்கிறது

பச்சையாய்
பசுந் தோரணமாய்
வாழைகள் அருகே தொங்கிய
காலமதில்
முன்னிற்கும் மகிழ்வை அளித்தது

இன்றோ அது
கன்னச் சுருக்கும்
கழுத்துவட மடிப்பும்
பனை வட்டு விடும்
காவோலையாய் கொள்கையில்

கண்ணாடி மீதினில்
கோபம் வருகிறது.

**1999**

## அந்தியின் மின்னல்

இலையுதிர் காலம்
மழையுடன் நனைந்த
ஓர் இரவில்
அந்திவானில் சிறுமின்னல்

கால்நூற் றாண்டின்
பின்னரா அவள்குரல்
தொலைபேசி யூடே

வெவ்வேறு மணற் பரப்பில்
வேறு வேறாய்
காய்த்தும் கனிந்த முதிர்விலா?

குழைந்த குரல்களில்
மனங்கள் மீண்டும் கனிந்தன
இற்றுப் போகும் விதைகளுள்ளே
இடுங்கி இருந்த துளிர்கள் விரிந்தன
பொய்யாய் உறைந்த படிவுள்
பொசியும் நீரின் அசைவு.

உயிர்த்த அக்கணங்களில்
உலகு புறத்தே மடிந்தது
விரிந்த மன வானில்
விண்மீன்களின் சிமிட்டல்

பிரிவின் வேரினைப் புறமொதுக்கி
புழுதி மணலில் கால்பதிந்த
பூக்கள் சொரிந்தன.

அந்தியின் மாயக் கோலங்கள்
அடிவானில் மட்டுமல்ல...

**1999**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோடை

கோடையின் வெம்மையில்
குளிர்கால
ஆடைநீக்கிய வாழைகள்

விழி வெறிகொள்ளும் வண்ணம்
வடிவுக் கொன்றாயும்
வண்ணத்திற் கொன்றாயும்
காதல் தேவதையின்
சிம்மாசனங்கள் அசைய
வீதியெங்கும்
வனப்பின் உலா

வாடிக் கிடந்த தினவில்
நாற்றுக்கள் அசைய
புயல் காற்றிலோ மனம்

**1999**

## ஓயாத அலை

இடி மின்னலோடு
காற்றுச் சினம் கொள்ள
அலையின் தினவில்
அணை உடைந்தது

ஓ வென்ற இரைச்சலுடன்
பொங்கிய பெருவெள்ளம்
ஊற்றை நோக்கி
வேகம் கொண்டு விரைந்து
ஓரமாய் நின்ற
தடைகள் அனைத்தையும்...

சூரிய வெம்மையில்
வெடித்த பாளங்களிடையே
நீர்புக
நிலம் குளிர்ந்தன
நிலமூறிய வெம்மை
ஆவியாய் அகன்றன

காற்றின் அனலும்
அகன்று குளிர
வீட்டு முற்றத்தில்
தென்னோலைகள் நிழல் விழுத்தி
நிலவெறிக்கும் காலத்தில்
நாட்டார் பாட்டொலிக்க

செட்டை அடித்த
வெள்ளடிச் சேவலின் கூவலோடு
காலடியில் கேட்கிறது
ஓயாத அலை

**2000**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணங்களின் போது
புத்தகத்தில் ஒன்றிப்
புறவுலகு மறந்தாயே
யசோதரா...

இறுகிய வரிகளுக் கிடையில்
எடுத்து மனம் வகுத்த
கற்பனையை உதறி
விழிகளை வெளியே விரி

அதோ பார்
உயிர்களின் உலா
எத்தனை முகங்கள்
எத்தனை பாவங்கள்
தனித்தனி நூல்களாய்

கட்டிடக் காட்டுள்ளும்
பசுமை தலையாட்டும்
கோலமதை
மனதுள் வசமாக்கு

சுள்ளெனச் சுடரும்
சூரிய ஒளியில்
கண்ணிதழ் மூடாதே
அபூர்வமாய் வாய்க்கும்
அந்தக் கணங்களை
அள்ளி விழுங்கு

வீட்டிலும்
புத்தகம் படிக்கலாம்

**2000**

## அம்மாவின் முகங்கள்

வெண்திரையாய் வீழ்ந்த விடிகாலை
அப்பத்திற்கு
மூட்டிய அடுப்பின்
வெக்கையிலும் புகையிலும்
கண்கள் சிவந்த முகம்

மாலைக் கருக்கலில்
மாதா சொரூப முன்னால்
மெழுகுதிரிகள் ஒளிமின்ன
நெஞ்சுருகி
கீழுதடு துடிக்கும் முகம்

ஊர் உறங்கிய போதும்
அப்பக் கடைக்காய்
மாப்பிசைந்து பதப்படுத்த
தூக்கம் வருத்தும் முகம்

ஊர் துறந்து
உறவின் வேரிழந்து
நீரோடு அள்ளுண்ட
சாதாளையாய் பெயர்கையில்
வாஞ்சை யெல்லாம்
கைகளில் தேக்கி
முகம் வருடி
முத்தங்கள் ஈந்த முகம்

**2000**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்குமிழ்களின்
ஒளி மினுங்கும்தரை
விரைவு கொள்ளும் கால்கள்
இடைக்கிடை
வண்டில்கள் ஓசை

வைத்திய அழைப்பிற்கான
காத்திருப்பு
அருகே
அடிக்கடி எழும் பெருமூச்சுக்களுடன்
அணைத்திருந்த கரங்களிடை
இருசிறு விழிகள்

சின்ன உடலில்
என்ன நோயோ
வேதனையை
விளக்க முடியாப் பிஞ்சு
அன்னை துயர்
ஏன் என்பதும்
அறியாத தளிர்

மலங்க மலங்க
விழிக்கும் விழிகள்
மனதைப் பிழிகிறது

**2000**

## மரம் பற்றியோர் பாடல்

எம்வீட்டு முற்றத்தில்
வேரோடி விரிந்து கிளைத்த
மரம் பற்றிய குரல்கள்
இவ்வாறு கேட்கிறது

கோறை பிடித்தன கிளையில்
கீழோடி அவை
வேர்வரை நீண்டு
வீட்டின்மேல் வீழ்முன்னர்
வேரோடு வீழ்த்துங்கள்.

ஆனால் அந்த மரமோ
சூழ முளைத்த சோத்திகள்
காற்றிற்கு முறிந்தும்
தலைசாய்த்து
வீரம் இழந்து போக
வீசியெழுந்த புயலுக்கெல்லாம்
வளையாத வைரமாய்
வாய்த்த வேம்பது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடை வெம்மையைக்
குறைத்த நிழலாயும்
வாடை வாரிய
குளிரை வடித்தும்
போர்வையாய் வீட்டின்
பொல்லாப் பெல்லாம்
காத்த மரம்

வாய்த்த வேம்பினை நீக்கி
எம்வாழ்வின்
காப்பை நீக்கும்
கதைகள் முறையோ

பூசணி பிளந்து
குங்குமம் பூசி
பேயது துணை வழி
பில்லி சூனியம் வைப்போர்
வேம்பினை விரும்பார்

வேம்பினை நீக்கும்
சூதினை வெல்லக்
கோறை யுள்ளோடிய
கிளையினை நீக்கும்
மதியினைக் கொள்வோம்

**2001**



## பலஸ்தீனமும் எனது மண்ணும்-2

இன்னமும்
அழுகுரல்கள் சூழ
தலைவிரிகோலமாய்
புலம்பும் பலஸ்தீனமே!

ஆக்கிரமிப்பின் அக்கினியில்
வெந்தவர் என்பதனால்
உனது துயரின் கனமதை
நானும் உணர்வேன்

ஒன்றான நிலையிருந்தோம்
கிளை பிரிந்து
வந்துள்ள நிலையிலோ
தலைகீழ் மாற்றம்

உனது மண்ணின் அதிர்வுகளால்
செல்லும் பாதையைச் செப்பனிட்டு
நிமிர்வு கொண்டோம்
இன்னமும் ஏன்நீ
யாசிக்கின்றாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால மழையில்
வலுக்கொண்ட விதைகளை
வீச்சுடன் உயிர்ப்பித்த
மண்வளம் எமக்கு வாய்த்தது
நிமிர்வு கொண்டோம்
நெஞ்சை மிதித்தவன்
நிலைகுலைந்து போக

ஆக்கிரமிப்பாளன்
சொகுசான இருப்பின் அடித்தளம்
அசைக்கப்படும் வரைக்கும்
அவன் அசையான்

என் நேசத்துக்குரிய
பலஸ்தீனமே
சிந்தும் ரொட்டிக்கான
நிலையினை மாற்றாயோ?
வீதிகள் தோறும்
கற்களோடு உலவும் வீரத்தைக்
குவித்துக் கொள்ளாயோ?
உப்பு மூட்டைக்கான
குனிவினை நிமிர்த்தாயோ?

இறுகும் சல்பீனியச் செடியை
அறுத்து எறிந்து கொள்
உனது பொய்கை
புதிய ஒளியை வாங்கி
மின்னலாய் தெறிக்கட்டும்.

**2001**



## வெண்புறா

வெண்புறாவே வெண்புறாவே
வானப் பெருவெளியில்
ஒலிவின் கணுவோடு
வெண்சிறகை விரிக்கின்றாய்

நின்செங் காந்தள்
விரல்பதியா மண்ணெங்கும்
அவலக் குரல்களும்
அழிவுகளின் குவியல்களும்

மனுக்குல மகிழ்வின்
நெஞ்சினில் மிதிப்போர்
நின்னை வெறுப்பரே

மலரின் எழிலின்
மௌன மொழியோடு
கந்தகக் காற்றில்
சோர்விலா நின்வெண்
சிறகினை விரிக்கின்றாய்

விண்ணெங்கும் வீரிடும்
எரிநாசக் கலங்களின்
கண்பட்டு நின்மென்
சிறுபஞ்சுப் பொதியுடல்
சிதையாது காப்பாயோ

ஆண்டு பலவாய்
அழிவும் அவலமுமாய்
நீண்டு கிடக்கும்
எம்வீட்டு முற்றத்தில்
நடைபழகல் ஆகாதோ?

**2001**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்களின் திருவிழா

திருவிழாக் காலம்
இப்போது
பொய்களின் திருவிழாக் காலம்

மிக்க கவனமாய்
தேர்ந்து கோர்த்த வார்த்தைகள்
நெஞ்சை அள்ளும்
நியோன் ஒளியின் எழிலுடன்

நாமறிந்த உலகின் தீமைகள்
வண்ணச் சரிகையுடன்
பொம்மலாட்டம் முன்செல்ல
பிற்பாட்டுப் பாடி
தாளமிடும் அணிதொடர
வாண வேடிக்கையாய்...

திருவிழா நெரிசலில்
கால்களில் கசங்கிய
மணலுள் புதைந்த
துண்டு துணுக்குகளாய்
நாமறிந்த உலகின் உண்மைகள்
உயிர் சிதறிக் கிடக்கின்றன.

**2001**



## மீறல்

வீதிக்காய்
விரித்து நெரித்த கற்களிடையே
சிறு
புல்லொன்று பூத்திருக்கு

**2001**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாரது

தூர இருந்து
ஒலிக்கும் குரலினால்
ஆழ்மனக் கசிவில்
வண்ணச் சிறகு கொண்டு
வருடுபவர் யாரோ...

மலரோடு சதிராட
வண்டினம் மூசும்
ஒரு கிராமத்தின் காலையில்
மார்போடு புத்தகமும்
மறுகை கோர்த்த
தாமரை மலர்களுடன்
மசுந்தி மசுந்திப் போவது யாரோ...

நள்ளிரவில்
எங்கோ நாய் குரைக்க
சேற்று உழவின் மணமும்
சிள்வண்டின் ஓசையும்
காற்றில் கலந்திருக்க
தூங்க மறுத்து
வீதியை நிலைத்து ஒளிர்வது
யாரது விழிகள்?

அலையலையாய்
நெல்மணிக் கதிராட
நிரைநிரையாய்
வளையல்கள் களை பிடுங்கி
வாய்க்கால் குளித்து
வரப்போரம் நடை பயில
நீர்தெளித்துப் போகும்
ஈரக் கால்கள்
யாரது கால்கள்?

**2001**



## வல்லமை சேராயோ...

வல்லமை உள்ளோனை
வலம் வருவாயோ
அன்றேல்
வல்லமை கொண்டோனாய்
நீயே ஆகுவையோ?

எதுவாயினும் இப்போ
வாழ்வு தரும் காலமையா

வல்லமையோடு ஒரு
வன்பகையை நாடினால்
மேதையாய் உன்னை
மெச்சுதலும் காண்பாய்

தோல்விகள் பலவீனங்கள்
இன்னும் உனக்கான
இன்னலின் காரணம் அனைத்தையும்
மூட்டையாய் பகையின்
முதுகில் மாற்றி
நல்லவனாயும்
ஆகலாம் இந் நானிலத்தே

**2001**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேம்ஸ் நதியே

நதியே
தேம்ஸ் நதியே
நின்னெழில்
சூழவுள்ள மின்னொளியில்
கொள்ளை போனதேன்?

இருகரையும் உரசிச்
செல்லுமுன்
சிறு அலையின் கானம்
வாகன ஒலிகளில்
மறைதல் முறையோ...

ஒலிகள் அற்ற அரவில்
மென் காற்றுடன்
நிலவின் ஒளிவெள்ளத் தியானம்
ஏந்தும் அழகுடன்
நின் கானம் இசைக்க
நடைபயிலாயோ...

**2001**



## கவிதை

வேலைச் சுமையிடை
மின்னலாய்த் தெறித்தன
கவிதை வரிகள்
தெறித்த பொறியில்
விகாசம் கொள்ளாது
மனயன்னலை மூடி
வேலை முடித்து
மின்னல் ஒளியை
மீட்க முயல்கையில்
உயிர் இழந்து
கிடந்தது கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைவு

பூமியின் எட்டுத் திசையிலும்
எளியோரை
எது விரட்டுகிறது...

இல்லிடம் அற்ற ஏதிலிகளாய்
சிறு பொதியுடன்
வீதி ஓரங்களிலும்
சிலுநீர் சிந்த
மரங்களின் கீழும்
ஒதுங்கி இருக்க
எது விரட்டுகிறது?

கண்களில் புதைந்திருக்கும்
எதிர்காலமற்ற ஏக்கத்தினையும்
உயிர்தப்பி ஓடிவருகையில்
நடுவழியில்
இழந்த உறவுகளால்
எரியும் வயிறுகள் பற்றியும்
எவர் கவலை கொள்வர்?

அவர்களுக்கான
கூரை ஒன்று இருந்ததை
நிலாக் காலக் கதைபோல்
கூற வேண்டி யுளதே

எங்கே என்ற கேள்விக்கு
வழியும் கண்ணீரில்
எதைக் கண்டு
பிஞ்சுகள் அமைதி கொண்டனர்

இன்றொதுங்கிய
இந்த இடத்தின் உயிர்களும்
எந்த எரிகுண்டுக் கிரையோ?

விளங்காத கணங்கள் நிம்மதிதான்
நிம்மதிதான்
நிரந்தரமாய் எளியோர்க்கு
இருந்த தில்லையே

**2001**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ராலின் கைகுலுக்க மறுத்தபோது

*(கொர்பச்சேவின் 'மறுசீரமைப்பு'க்குப் பின்னர் வெளிவரத் தொடங்கிய அநேக இரகசிய ஆவணங்களுள் சிலவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட திரைப்படம்* Stalin: Secret History. *சோவியத் இரசியாவின் ஸ்ராலின்கால* N.K.V.D.*க்கள் ஸ்ராலினுக்கு எதிரான மூச்சுக்காற்றை மோப்பம் பிடித்து அலைந்த காலத்தில் யாகொட, யஸ்கோவ், பெரிய போன்றவர்களினால் மேற்கொள்ளப் பட்ட களையெடுப்புகள் பற்றியது இந்த ஆவணப் திரைப்படம். இத்திரைப்படத்தில் ஒரு காட்சி:*

*"செர்ஜி" நகரிலிருந்து விடுமுறையைக் கழித்துத் திரும்பும் ஸ்ராலினை வரவேற்க இராணுவ உயர்மட்ட அதிகாரிகள் வரிசையாக நிற்கிறார்கள். ஸ்ராலின் அவர்களுடன் கைகுலுக்கியபடி வருகிறார். இப்போது யாகொடவின் முறை. யாகொட சலூட் அடிக்கிறார். ஸ்ராலின் அவரைக் கவனியாது கடந்து சென்று மற்றவர்களுடன் கைகுலுக்கிச் செல்கிறார்.)*

* யாகொட!
ஆணவம் புதைந்த விழிகளில்
மரண தேவதையின்
கருநிழல் படர்ந்த அக்கணத்தில்
உனக்கான
காலடியின் எல்லைகளும்
காற்றின் அளவும்
தீர்மானம் ஆயிற்று
உயர்ந்த கரங்கள்
வாழை நாராய் துவண்டபோது
எல்லாம் முடிந்தது.



இப்போது நீ
அகற்றப்பட வேண்டியவன்

வதை முகாம்களில்
கனத்த சப்பாத்துக்கள் எழுப்பிய
அதிகார ஓசையில்
நடுங்கியோர் திகில்
கடந்து சென்ற காலடியில்
உனக்குள்ளும்

சித்திரவதையில்
ஒப்புதல் அளித்து மடிந்தோரும்
பனிப் பாளங்களிடையே
அனாதையாய் புதைபட்டோரும்
ஆவிகளாய் கைகோர்த்து
ஒரு வசந்த காலப் பாடலுக்கு
நடனம் ஆடுவது கேட்கிறதா?

நீ குளிர்வித்த
அதிகார இயந்திரத்தின் முன்னே
வெறும் சக்கைநீ
நித்தியம் என்று நம்பிய
அதிகார மமதையின் கொலு
வீழ்ந்த பின்னர்
மூடுண்ட அதிகார முனை
மாறி மாறித் தாழ்ந்த வரலாற்றை
இனிக் கற்று என்ன பயன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சம் இலட்சமாய்
சிதைந்த கூட்டில் மிஞ்சிய குருவிகள்
மீட்டும் துயர யாழின் ஒலியை
இனிக் கேட்டு என்ன பயன்?

**2001**

* Yagoda Genrikh Grigorievich (1891-1938), NKVD என்ற உளவு ஸ்தாபனத்தின் தலைமை அதிகாரி. ஸ்ராலினுக்குத் திருப்திதரும் வகையில் ரொட்ஸ்கி – சினோவியேவ் அணியினரைக்களை எடுக்கத் தவறியதால் 1936இல் கைதுசெய்யப்பட்ட இவர், பிரபலமான மொஸ்கோ விசாரணையின் பின்னர் 1938இல் சுட்டுக் கொல்லப் பட்டார்.



## செங்கோல்

நல்லன அல்லனவாய்
நான்குபேர் அமர அமைந்த
நாகரிகம் மிகுந்த நகரம்
புதையுண்டு போக
கல்லறைகளின்
பட்டிப் பூக்களே
கந்தகக் காற்றில் அசைந்தன

இடிபாடுகளிடையிலும்
எரிந்து கருகிய
புராதனச் சின்னங்களி டையிலும்
கபாலங்களால் சமைந்த
சிம்மாசனத்திற்காய்
எலும்புகளால் உருவான
செங்கோல் அமைந்தது

தர்மத்தின் வெண்சிறகுகள்
வெட்டுண்டு அக்கினியில் வீழ
இரு கொம்புகளோடும்
கரிய சிறகுகளோடும்
அதர்மம் எங்கும் அலைந்தது

கண்ணுக்குப் புலராத
கால் விலங்குடன்
குனிந்து குனிந்து
கூன் உருவாகிய
மக்களுமாய்...

**2001**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர் காலம்
இலைகள் இழந்த கிளைகள் நடுவே
மைனா ஒன்று
இதுவும்
புலம் பெயர்ந்ததுவோ...

**2002**

## புலம் பெயர்ந்தோர்

புலம் பெயர்ந்தோர்
ஆற்றோரம்
அருகிருக்கும் மரம் என்பர்
அறியார் அவர் மனமோ
தனிமைக்
காற்றோடு அள்ளுண்ட சருகென்று

**2002**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புள்ளியில் மனம்

தறிகெட்டு ஓடும்
கடிவாளம் இழந்த குதிரை
ஓவென்ற வெளியின் புள்ளியில்
இழுத்து நிறுத்தும் முயல்வு

பிடரி பற்றி இழுத்து
முதுகில் குந்த
திமிறி எகிறிய
பின்னங்கால் உதைவில்
மல்லாந்த வீழ்ச்சி

காயங்கள் பயில்வில்
புள்ளியில் மனம்
வசப்படல் வாய்க்காதோ...

**2002**

## சிறு ஓய்வில்

முதுகு முறியும்
வேலைச் சுமையிடை
வாய்க்கும் சிறு ஓய்வில்
ஆர்வமாய் அவனுடன்
கதைக்கும் வழக்கில்
அன்று கூறினேன்

இம்முறை அமைதி
அங்கு
கைகூடி வரலாம்...

கரிநாக்கா...
சீறிப் படம் விரித்து
சிவனின் நெற்றிப் பொறிகளுடன்
“அங்கம் குலுங்க
அரிவாளில் நெய்தடவி
பங்கம் பட...”வென
பல்நறும்பி விலகினான்

ஏதுபிழை என்பது அறியேன்
அறிந்தோர் உரைப்பீரோ...

**2002**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரைகளின் பின்னால்

தொடர்ந்த புறக்கணிப்பின்
வெம்மையில் எழுந்த மீறலில்
நிலைகுலைந்தோர்
தம் காலடிகளை அழித்துவிட்டு
எனது மீறலையே
வெட்டி எடுத்து
ஆராயும் பாங்கில்
வாழ்விலிருந்து சாவுக்கான
அரங்காக மாற்றும்
சூது புதைந்த நாடகத்திற்கு
சுயநல வேர்பாய்ந்த
தூரதேச நெறியாளர்கள்
திரைகளின் பின்னால்

**2002**

## மீண்டும் வரும் நாட்கள்

### வியாழன்

அந்தியின் அடிவான்
துயரின் பிழிவாய்
செம்மை விரித்திருக்க
இறுகிய அதிகார அமைப்பு
நியாயங்களைப் புதைக்க
கல்லறைகள் அமைக்க
வியாழனைத் தெரிந்ததனால்
ஜெத்சமனியின் இருளில்
சத்தியம் புகலிடம் தேடின

கால் நடந்த கரையெல்லாம்
பின் தொடர்ந்த பாதங்கள்
அருகிருந்து ஒன்றாய்
விருந்தமைந்த நாட்கள்
விரோதமாய் விலகிப் போகும்

கட்டி அணைத்து ஈந்த
கன்னத்து முத்தங்கள்
கைவிலங்காய் மாற
குளிர்காய்ந்த சுகம்
சேவலின் கூவலின்முன்
கைநெகிழ்ந்து மறுதலிக்கும்

இருளோடு அச்சம் குடியேற
நிச்சயமற்ற கணங்கள்
நீண்டு கிடக்க
தலையாட்டிகள் தயவில்
இழுத்துச் செல்லப்படுவோரால்
அயல் அச்சமுறும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II

ஆளும் வல்லமையின்
அதிகாரம் நிறைந்த அலகு
சட்டத்தின் வரைவுகளில்லா
தனிமனித இராச்சியம்
வன்மனக் குரோதங்களின்
ஆடுகளமது அங்கே
வெள்ளாடுகள் விலங்கோடு
விசாரணை எனும் பெயரில்

கற்றூணும் கசையடியும்
முள்முடியுமாய்
நொந்து சிதைந்தது
நீதியின் உருக்கள்
வன்ம நிந்தனையில்
குதூகலம் கொண்டன
கூலிகள் குழுக்கள்

நீதித் தேவதையின்
வைர நெஞ்சு நொந்து
வெடித்து வெள்ளியாய்
வானில் சிதறியிருக்க

வதை முகாம்களுள்
உறங்கா விழிகளோடு
உடல்கள் சிதைய
ஏதறியா மக்கள்
இருளில் தூங்கினர்

***வெள்ளி***

பொல்லா இருள் நீங்கிப்
பொழுது புலர்கையில்
ஊரறியாது அரனுள்
ஒப்புக்கு ஒருசபை கூடும்

சதியை மறைக்க
சரிகையாய் விசாரணை
தீர்மானித்த சிலுவைக்காய்
தேடியெடுத்த குற்றங்கள்

அதிகார வேர்களின்
முட்கள் உறுத்தினும்
உட்பகையினை ஒழிக்க
அந்நிய அதிகாரம்
பணிந்து சதியை
சபை யேற்றுவர்

சூதும் வஞ்சகமும்
தூபமிட்ட அரசும்
பாரச் சிலுவையாய்
தோளில் அழுத்தவும்
கூர்முள் முடியாய்
ஆழப் புதையவும்
நீதி சிதைந்து
செம்மறிப் புருவையாய்
தொய்வோடு
தூரத் தெரிந்த கல்வாரிக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II

காவலர் சூழநின்று
கட்டியிழுத்துக் கசையடியோடு
நெட்டி விழுத்த
இரத்தமும் வியர்வையும்
பிழிந்த உடல் விழுந்து எழ
இழுத்துச் செல்லப்படும் இரைகளுக்காக
தலைவிரி கோலமாய்
மார்பில் அறையும்
அன்னையர் அழுகை ஒலி
வீதியெங்கும் ஒலித்தன

‘பிள்ளை பெறா வயிறுகளும்
பாலூட்டா முலைகளும்
பாக்கியம் செய்தவை’யென
சொல்லிய நாட்கள் வந்தன

அறநெறிகள் அசையாது
நீதியின் கைகளை விரித்து
ஆணிகள் அறைபட
வானுக்கும் பூமிக்கும் நடுவில்
சிலுவையில்
அறநெறிகள் தொங்கின

நடுப்பகலில் வானம்
இருளத் தொடங்க
செம்புரவி ஒன்று எழுந்து
திசைகள் எங்கும் சென்றன



III

வானகமே வையகமே
அறநெறிகள் கருமடியே
சுமந்துவந்த நீதியெலாம்
கொல்கொதா குன்றில்
கொலையுண்டு தொங்கியதால்
குமுறியதோ வானகம்

வியாகுல மாதாக்கள்
கொட்டும் மழையில் நனைந்து
மரணத்தில் தொங்கும்
பிள்ளைகளுக்காய்
வயிற்றிலும் மார்பிலும்
அடித்து அடித்து
நொந்தழும் நாளாச்சு

அடிவானில் இருண்ட
மேகங்களின் திரள்
எங்கும் பரவுகையில்
மின்னல் வெட்டிப் பிளக்க
அதிகார வாசலை மூடிய
திரைச் சீலை
இரண்டாய் கிழிந்தது

வானம் சோவெனச் சொரிய
தூரக் கடல் ஒருமுறை
குமுறி உறைந்தது
கரையில் மரங்களில்
இலைகள் அசைய
மறுத்து உறைந்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சனி

பூமியில் எங்கும்
புதைந்து கிடந்த தீமைகள்
பொல்லாப் பேய்களாய்
உயிர்கொண்டெழுந்தன
பகையிலா வாழ்வு
வகையாய் வாய்த்ததால்
கூடிக் கூடி
தழுவி மகிழ்ந்தனர்
கை கொட்டி
ஆடி ஆடி
வேர்த்தனர் ஆர்த்தனர்

இருள் உறைந்த வீதிகளில்
பேய்களின்
வெற்றிப் பறையொலி
தோம் தோமென்று ஒலித்தன
பேச்சிகள் நாட்டிய
சலங்கை ஒலிகள்
சல் சல் என்றெழுந்தன
பயந்து பதுங்கிச் செல்பவரை
வன்குரல்கள் சூழ்ந்து
நில் நில் என்று மறித்தன
விசாரணை எதுவுமில்லை
கொல்லென்று குரலெடுத்தனர்

பேய்கள் குதறிய பேதையர்
காலையில் கருகிக் கிடந்தனர்
தலைகள் சிதறிய உடல்கள்
சாலை மருங்கில் கிடந்தன
சாக்கு மூட்டைகளுள்ளே
முண்டங்கள் பெருகின
ஏன் என்ற சொல்லை
எல்லோரும் இழந்து போயினர்
அச்சம் களம் அமைக்க
அநீதி நடை பயின்றது
நீதி ஒளியினை நாடியோர்
நடுங்கி ஒளிபுலராத
குகையுள் தலைமறைந்து
குடித்தனம் கொண்டனர்

மங்கல் நிறப் புரவி
மகிழ்வாய் வீதியில் நடைபயில
நட்சத்திரங்களை
இழந்த வானை
இருள் மூடிக் கொண்டது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞாயிறு

காரிருள் கவிந்து கிடந்த
கிழக்கு வானின் ஆழ்வில்
எழுந்தன புலரியின் கதிர்கள்

காற்றில் கலந்திட
தவம் கொண்டிருந்த
நறுமணத் தாதினை
மூடியிருந்த கோதில்
மொய்த்தன கதிரின் ஒளி
கைத்தலம் விரித்தன மலர்கள்

ஒளியைப் புதைத்து மகிழ்ந்தோர்
உவகை அகல
தீமையின் சுமையினை உதைத்து
உயிர்த்தன உண்மை உரு
மரணமாய் அமைந்த
சிலுவையினை
வெற்றிக் கொடியாய் ஏந்தி
ஒளிமுடி புனைந்து
வெண்பட்டுத் துகிலணிந்து
மரணத்தை ஜெயம் கொண்டு
ஒளியோடு எழுந்தான்
நீதியின் தேவன்

தேவதூதர்கள் வானில்
தூயவெண் மேகத்தினை
துகிலாய் உடுத்தி
நட்சத்திரங்களை வாரி
பூக்களாய்ச் சொரிந்தனர்



II

அலைகள் மீண்டும் உவகையாய்
ஆர்ப்பரித்து அசைந்தன
கரைகள் எங்கும் முறிந்த கிளைகளில்
துளிர்கள் முளைத்தன
நதிகள் முதுகில்
ஒளியைத் தாங்கி
வழிந்து செல்கையில்
கற்கள் உரசிக் கலகலத்தன
திசைகள் எங்கும்
புள்ளினங்கள்
கானமிசைத்துப் பறந்தன

சத்தியம் தோற்றதாய்
அச்சம் குடிகொள்ளக்
குகைகளில் ஒளித்தோர்
குதூகலித் தெழுந்தனர்

மக்டலினே!
ஓ! மேரி மக்டலினே
ஒரு புலர் காலையில்
சத்தியத்தைத் தேட
புதைகுழி போனவளே
மாட்சிமை உருவும்
மகிமை ஒளியுமாய்
ஒடுக்கப்பட்டோர்க்காய்
உன் ராபி
உயிர்த் தெழுந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழங்குக ஜெய முரசை
ஏழாம் தூதன் இசைத்த
எக்காளத் தொனி கேட்க
குத்துவிளக்குகள் மத்தியில்
குடியிருக்கும் ஒளியை
மரணம் என்றும்
ஜெயம் கொள்ளாதென
முழங்குக... முழங்குக

இருந்ததும் இருப்பதும்
இருக்கப் போவதுமான
இருப்பிற்கு
என்றும் வாழ்வென
முழங்குக... முழங்குக

**2002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org